# கனவற்றவர்களின் வாழ்க்கை



ஆரிசன்

# கனவற்றவர்களின் வாழ்க்கை

**ஆரிசன்**

**ஆசா பதிப்பகம்**
1126 / 2, எம்.ஜி.ஆர்.நகர்
கீழ்க்கொடுங்காலூர் அஞ்சல்
வந்தவாசி வட்டம் – 604 403
திருவண்ணாமலை மாவட்டம்
94423 11118.

**கனவற்றவர்களின் வாழ்க்கை (கவிதைகள்)**

☐ ஆசிரியர் : **ஆரிசன்**
☐ உரிமை : © ஆசிரியருக்கு
☐ பொருண்மை : கவிதை ☐ அளவு : டெம்மி

☐ முதல் பதிப்பு 2015, இரண்டாம் பதிப்பு : ஜூன் 2025

☐ பதிப்பு : **ஆசா பதிப்பகம்**
சாவித்திரி ஆரிமுத்து இல்லம்
1126 / 2, எம்.ஜி.ஆர்.நகர், கீழ்க்கொடுங்காலூர் அஞ்சல்,
வந்தவாசி வட்டம் – 604 403, தி. மா. பேச : 94423 11118.

☐ ஒளி அச்சு : **ஜோதி பதிப்பகம்**
எண் : 2/1067, 11 ஆவது தெரு, 2 ஆவது குறுக்குத் தெரு,
முகப்பேர் மேற்கு, சென்னை – 600 037. கைபேசி : 9940190616

Pages : 132 Rs. : 140/-

**Kanavatravarkalin Vaazhkkai**

# Author : **Arison**
# Copy Right : © Author
# Subject : Poetry
# Book Size : D/S # First Edition 2015, Second Edition : June 2025

Publication : **Aasha Publication**
Savithiri Arimuthu Illam
1126 / 2, MGR Nagar, Keezhkkodungalur Post
Vanthavasi Taluk, Thiruvannamalai D.T.

Layout & Printing : **JOTHI PUBLICATIONS**
No. 2/1067, 11th Street, 2nd Cross Street
Mugappair West, Chennai - 600 037.

# அணிந்துரை

--------------------

கவிஞர் ஆரிசன் ஹைக்கூவிலிருந்து சில ஆண்டுகளுக்குப் பின் புதிய கவிதை வெளிக்கு இத்தொகுப்பின் மூலம் வருகிறார். முதல் முழக்கமே கம்பீரமாய் உள்ளது.

**பூமியை விட்டு**
**பறந்து சென்றாலும்**
**துரத்திக் கொண்டே வருகிறது கவிதை.**

என்று அமர்க்களமாய்த் துவக்குகிறார்.

ராஜம் கிருஷ்ணன், இயக்குனர் கே. பாலசந்தர், நெல்லை கோபி ஆகியோருக்கான அஞ்சலிக் கவிதைகள் மனதைத் தொடுகின்றன.

**கலைநயம் கனியும் பாட்டால்**
**கடுகேனும் பயனுண்டா**
**நிலைமையைத் திருத்துவதற்கே**
**நெருப்பினால் பாட்டு வேண்டும்.**

என்றார் சோவியத் கவிஞர் ரசூல் கம்சதேவ்.

இத்தொகுப்பில் தீண்டாமைக் கொடுமைகளையும் ஆணாதிக்கம் மற்றும் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள், மீனவத் துயரங்கள் குறித்த கவிதைகள் சிறப்பாக உள்ளன.

உதாரணமாக,

**தொடரும் பாலியல் வன்மங்களில்**
**புகைந்து கொண்டிருக்கிறது**
**பெண் விடுதலையின்**
**நெருப்பு.**

என்பதையும்,

**தென்றல் தீண்ட மறுத்து**
**தேர் இழுக்கமுடியாமல்**
**திக்குத் தெரியாத காட்டில்**
**எப்போதும் சூறையாடப்படுகிறது**
**கனவற்றவர்களின் வாழ்க்கை.**

என்பதையும் குறிப்பிடலாம்.

தீபாவளி குறித்த கவிதையில்,

**தீண்டாமை இருள் எங்கும்**
**தீயும் நாள் எப்போது?**
**தீப்பந்தம் ஏந்தட்டும்**
**தீபாவளி**

என்கிறார்.

வாழ்வின் காட்சிகளைக் கவிஞன் தனது மாய வித்தைகளால் காட்சிப் படுத்துகிறான். தெரிந்த விஷயங்களிலே இருந்து தெரியாத விஷயங்களை நோக்கி வாசகனை அழைத்துச் செல்கிறான். முடிவில் முடிவற்ற அதிர்வுகளை ஏற்படுத்துகிறான்.

இதன்படி, இதிலுள்ள கவிதைகள் ஓரளவு நிறைவாக வந்துள்ளன.

**பாலின் நிறம்**
**கருப்பாகவே தெரிகிறது**

**உழைக்கும் தெருக்கோடி**
**மக்களுக்கு.**

இவை போன்ற வரிகள் மனதைத் தொடுகின்றன.

**தேவையற்ற சர்ச்சைகளில்**
**எப்போதும் திக்கு முக்காடுகிறது**
**அரசியல்**

**எல்லாவற்றையும்**
**விடுவித்து மகிழும்**
**கம்யூனிசத் தத்துவம்**
**வேர்பிடித்து வளர்கிறது**
**வேள்வித் தீ பரப்பி**

என்று முடிக்கிறார். சிறந்த கவிதைத் தொகுப்பு வாசியுங்கள்.

எஸ்.ஏ.பெருமாள்

12–3–2015
ஆசிரியர்,
செம்மலர், மதுரை.
செல்பேசி : 94422 46000,

# கிளையில் உயிர்த்திருக்கும் கவிதை

கவிஞர் ஆரிசன் ஹைக்கூ வழியாகத் தன் பார்வையை வண்ணத்துப்பூச்சியின் வண்ணமென வரைந்து தொடர்ந்து கவிதைகள் வழி இயங்கிக் கொண்டிருக்கும் நவீனக் கவிஞர்களுள் ஒருவர். சமூகத்தின் இயங்குதலை இயற்கையின் இயங்குதலைப் புரிந்து கொண்டவர் என்பதால் இவர் கையாளும் சொற்களில் உண்மையின் உண்மை வந்து உட்கார்ந்து கொள்கிறது. பூ மலர்வதைப் போல, பொழுது புலர்வதைப் போல சன்னஞ் சன்னமாக அது தன்னை நிலைநிறுத்திக் கொள்கிறது.

ஆரிசன் மொழி நமக்கு மகிழ்ச்சியூட்டுகிறது. ஹைக்கூ கவிஞராக முகிழ்ந்தவர் என்பதால் நீர்த்துப் போகாதபடிக்குச் சொற்களை கட்டுறுதியாகக் காட்சிப்படுத்துகிறார்.

ஒரு சோப்பு குறித்துக் கூட சமூக உணர்வோடு எழுத முடியும் என்று ஸ்ரீஸ்ரீ ஒரு தடவை சொன்னது போல ஆரிசனின் கவிதை பாலை, மணல், பச்சையம், காற்று, மரம், ஒற்றை இலை, பனி, நிலா, கடலுயிரிகள், கிரானைட், கந்துவட்டி, கருப்புப்பணம், அம்மிக்குழவியில் உருகும் தாய்மை நெசவாளியின் கா குழி வரைக்கும் படிமத்தில் பந்தி வைத்திருக்கிறார்.

படைப்பாளி என்பவர் கிடைத்த, உணர்ந்த வாழ்வின் தரவுகளைக் காலத்தின் முன்னும் பின்னும் சென்று தரவுகளின் நீட்சியை உண்மை போலும் புனைவாக்கி, பின்னிப் பின்னிக் காட்டுபவர் மட்டுமல்லர். புனைவில்லாது காட்சிப் புலன் வழியாகவும், ரத்தமும் சதையுமான வாழ்வனுபவத்தை

நிகழ்காலம் நம்முன் வைக்கிற பொழுது அதை அப்படியே எடுத்து, அனுபவத்தின் கொதிநிலைக்கு ஏற்றது போல மொழியில் குழைத்துத் தருபவரும் படைப்பாளிதாம்.

வெள்ளி நிலாவைப் பார்த்திருக்கிறோம். பால் நிலாவைப் பார்த்திருக்கிறோம். அது என்ன சிவப்பு? சிவப்பு நிலா வழியாக வறட்சியின் தவிப்பை, மாசாகிப் போன சூழலின் உயிர் சுவாசத்தைக் காட்சிப்படுத்தியிருக்கிறார்.

மழை முறித்துப் போட்டாலும் மரங்களை எடுத்து நட இயலாதபடிக்கான மனங்களின் நெருக்கடி இருக்கிறதே, அது செடியும் கொடியும் மரமும் தழைப்பதற்கான இடம், நிலம் என்பதை உணராமல் நிலம் என்பது ஃப்ளாட் என்று குறுக்கிப் பார்க்கும் இரும்புக் குதிரையர்களின் பார்வையைப் பங்கீடு செய்கிறது கவிதை.

**மழை முறித்துப் போட்ட**
**மரங்களின் சோகத்தை**
**இன்னும் பார்த்தபடி**
**சாலையின் பயணம் தொடர்கிறது**
**இரும்புக் குதிரைகளோடு.**

**பாலின் நிறம்**
**கருப்பாகவே தெரிகிறது**
**உழைக்கும் தெருக்கோடி**
**மக்களுக்கு.**

என்று முடிகின்ற ஒரு கவிதை, பாலில் தண்ணீர் கலந்து ஊழல் செய்யும் அரசாங்கங்களின் முகத்தைக் காட்டுகிறது.

கந்துவட்டிக்காரர்களுக்குக் காவல்துறை கனகாபிசேகம் செய்யும் உண்மையை உரக்கச் சொல்கிறது நெல்லை கோபி குறித்து எழுதப்பட்ட கவிதை.

**கறுப்புப் பணத்தை**
**கடலில் இருந்து எடுக்க**
**பூதம் ஒன்று**
**புறப்பட்டு வந்தது.**

என்று தொடங்கும் கவிதையின் பகடி வசீகரம், புறப்பட்டு வந்த பூதம் யார் என்பதைச் சொல்லாமல் சொல்லி,

**முந்தானை முடிச்சிலிருந்து**
**விடுபட முடியாமல் இருக்கிறது**
**முதலைகளின் பேய்மழையாக இருக்கும்**
**முதலாளித்துவம்.**

என்று ஊழல் முதலைகளுக்குப் பேய்மழையாக இருக்கும் முதலாளித்துவம் சார்ந்து எந்த பூதம் புறப்பட்டு வந்தாலும் கதி இதுதான் என்று சொல்லி, காவியின் பக்கத்தை காங்கிரசின் பக்கத்தைப் பகடி செய்து மீட்சிக்கான தேடுதலைச் செய்கிறது இந்தக் கவிதை.

ஆறு, மலைகளைத் தூர்த்து எடுக்கப்பட்ட மணல் குவாரிகள், சதுக்கப் பாறைகள் பற்றிய நிகழ்காலத்தின் பாலையை, வெம்மையைப் பதிவு செய்த ஆரிசன் நெடிதுயர்ந்து நிற்கிறார்.

**காகங்களின் கரைதலில்**
**பசியின் சுவடுகளைப் பார்த்தவர்**
**தாவிப் பறக்க முடியாமல்**
**கா குழிக்குள் அடக்கமாகிப் போகிறது**
**வாழ்க்கை**

என்று நெசவாளிகளின் மீதான, கைவினைத் தொழில்கள் மீதான, நவீன தாராளமயத்தின் அழிமதியைப் பாடுகிறார் ஆரிசன்.

**வார்த்தைகளை விட்டு**
**வெளியில் நின்றே சிரிக்கிறது**
**கவிதை**

ஹைக்கூ எழுதிப் பார்த்த கவிமனசு என்பதால் சொல்லவிழ்ந்து சடை விரிக்காமல் நறுக்கென வந்து விழும் கவிதை வழி அனுபவத்தின் படிமத்திரட்சியிலிருந்து கவிதை விலகி நிற்பதைக் கவிதையே கண்டுணர்ந்து சிரிப்பதாக எழுதினாலும்,

குடித்த முலைப்பாலின் ஓர்மையில் உதடு சப்பித் தூங்கும் தூளிக் குழந்தை போல,

**ஒரு மாலைப் பொழுதில்**
**மரக்கிளையில் உயிர்த்திருக்கிறது**
**பறவை**

என்றே பறவை பற்றிய எழுத்தானாலும் கூட, அது எமக்குக் கவிதையே என்பதாகப்படுகிறது. வாழ்த்துகள் ஆரிசன். தொடர்ந்து உயிருக்கு உரமாகட்டும் உங்களின் சொற்றானியம்.

இரா. தெ. முத்து,

துணைப் பொதுச்செயலாளர்
தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்
கலைஞர்கள் சங்கம்
எண்.2, எவரெடி காலனி, 2–வது தெரு
கொடுங்கையூர், சென்னை – 600 115.
செல் : 94442 47949.

## ஆரிசன்...

அழகுத் தமிழில் அனல் தெறிக்கக் கவிதை வரிகளைப் படைப்பவர். மறுபுறம், கொஞ்சு தமிழில் குழந்தைகளைக் குதூகலிக்க வைப்பவர். மின் இலக்கியப் பூங்காவில் மண்ணைப் பதப்படுத்தி இயற்கை உரமிட்டுச் செடிகள் பல உருவாக்கியதில் இவருக்கும் பங்குண்டு.

பூங்காவில் தொடர்ந்து பூத்துக் கொண்டிருக்கும் கவிஞர்களுக்கெல்லாம் ஒரு முன்னோடி இவர்.

அங்கங்கே பூத்திருக்கும் இவரது கவிதை நூலில் பல மலர்களின் அழகினில் பரவசப்பட்டு அனைத்து மலர்களையும் அணைத்துக் கொண்டு வர இடம் இல்லாமையால் சில மலர்களை மட்டும் இங்கு கோர்த்துக் கவிதை மாலைகளின் மணத்தை முகரக் கொடுத்துள்ளேன்.

அரசியலில் கடிதங்களுக்கு நேரும் கதியைப் பற்றிக் குறிப்பிடுகிறார். நகைச்சுவையை ரசிப்போம் நாமும்...

**கட்சிகள் கவர்ன்மெண்டுக்கு**
**எழுதிய கடிதங்களும்**
**தொண்டர்கள்**
**கட்சிகளுக்கு**
**எழுதிய கடிதங்களும்**

**ரசித்து ரசித்து**
**படிப்பது என்னவோ**
**குப்பைத் தொட்டிதான்.**

மதத்தை அடிப்படையாக வைத்துத்தான் பயங்கரவாதத்தின் கிளைகள் படர்கின்றன என்ற உண்மையைக் கீழ்க்காணும் வரிகளில் சொல்லாமல் சொல்லுகிறபோது நிகழ்காலத்தில் உலகம் சந்தித்துக் கொண்டிருக்கும் ஒரு பிரச்சனையில் கவிஞரின் சமுதாய விழிப்புணர்வைக் காண முடிகிறது.

**எல்லா மதங்களும் ஒரு போதும் ஆதரிக்கவில்லை**
**தீவிரவாதத்தை என**
**அறிக்கை விடுபவர்களிடம்**
**கேட்கத்தான் வேண்டியிருக்கிறது தீவிரவாதம்**
**பிறக்குமிடம் எதுவென்று?**

ஒரு பெண் மனதின் ஆழத்தைக் கூகுள் கூடத் தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லை எனக் கூறியது என நகைச்சுவையாகக் கூறுவார்கள். பலரின் வாழ்க்கையின் அனுபவத்தைக் கவிஞர் வரிகளில் வடிக்கிறார்.

**வல்லமைதான்...**
**புரிந்து கொள்ளவே**
**வாழ்வில்**
**ஓய்ந்து போனது வயது.**

இன்ப துன்பங்கள் மட்டும் வாழ்க்கையல்ல. அதையும் தாண்டி அனுபவிக்க நம்மை அழைக்கிறார் கவிஞர்.

**இன்ப துன்பமெனும்**
**இரு துருவங்களையும் கடந்து**
**ரசிக்கவும் படிக்கவும்**
**பழகவும் முடிகிறது வாழ்க்கை.**

அவதூறினால் மனம் முறிய அங்கு முகாரிகள் முளைத்துவிடும் ஆபத்தை ராகத்துடன் கவிஞர் ஒப்பிடும் அழகிய வரிகளைப் பாருங்கள்.

**அன்பின் பயணத்தை**
**அவதூறு கிளப்பி**
**அழித்து விடும்**
**ஆரோகணங்கள் இருக்கும் வரை**
**முகாரிகளின் ராகம்**
**பிரகாசித்தே இருக்கும்.**

கவிஞன் ஒருவன் காட்டில் நடந்து சென்றான். இடையில் ஒரு குளத்தில் குமரி ஒருத்தி ஆடையின்றிக் குளித்துக் கொண்டிருந்தாள். ஆண் கேட்டான், ஏனம்மா ஆடையின்றிக் குளித்துக் கொண்டுள்ளாய்?

பதில் அளித்தால் அவள், அப்பொழுதுதான் அழுக்குச் சரியாகப் போகும். திரும்பவும் கேட்டான் கவிஞன், சரியம்மா என் மனது கெட்டுப் போகாதா? அமைதியாக வந்தது பதில், அது உன் மனதில் உள்ள அழுக்கு என்று...!

கவிஞனுக்குக் கிடைத்த அடியில் சற்றுத் திகைத்து நின்றான். நமது கவிஞரின் வரிகள் இங்கு ஆணாதிக்கத்திற்கு அடி கொடுக்கும் வகையில் அமைந்துள்ளன...

**மனங்களை வெல்ல முடியாமல்**
**மாதர்களின் உரிமைகளை**
**வென்றுவிடுகிறது**
**ஆணாதிக்கத்தின் அதிகபட்ச**
**ஜனநாயகம்.**

மின் இலக்கியப் பூங்கா என்ற கிரீடத்தில் மேலும் ஒரு கல் பதித்துள்ளார் கவிஞர் ஆரிசன். மேலும், மேலும் இவரது

கவிதைகள் வரட்டும், சமுதாயச் சாக்கடைகளைச் சாடட்டும், விழிப்புணர்வு மலரட்டும் என மின் இலக்கியப் பூங்கா சார்பில் வாழ்த்தி மகிழ்கிறோம்.

அன்புடன்
சிவ. சிவக்குமார்

மாநிலத் துணைத் தலைவர்
மின் இலக்கியப் பூங்கா
30/11 (பழைய எண்.25/11) எஸ்.எஸ்.அடுக்ககம்,
பாலாஜி நகர் இரண்டாவது தெரு,
இராயப்பேட்டை, சென்னை–600 014.
கைபேசி : 9884046334.

# பாராட்டுரை

இன்றைய கவிதை சிக்கல்கள் நிரம்பியது. வாழ்க்கையை வியாக்கியானம் செய்யும் கோட்பாடுகளின் மறைவு; மனித இருப்புக்குப் பொருள் சேர்க்கும் கருத்தாடல்களின் மீதான நம்பிக்கையின்மை; முன்பு செப்பனிட்டு வைத்திருந்த பாதைகளில் நடக்க விதிக்கப்படும் தடைகள்; மேலோட்டமான படைப்பாக்க மல்யுத்தங்கள் எல்லாம் வாழ்க்கையையும் அதன் உடன் நிகழ்வாகக் கவிதையையும் சிக்கலுக்கு உள்ளாக்கியிருக் கின்றன. அந்தச் சிக்கலின் மையத்தைப் பேசுகிற ஒன்றாக இன்று கவிதை ஆகியிருக்கிறது.

முன்னர் எதைச் சொல்வது என்பது கவிதையின் சிக்கலாக இருந்தது. இன்றைய கவிதையில் எதையும் சொல்லலாம். ஆனால் சிக்கல் எப்படிச் சொல்வது என்பதுதான் - எனச் சொல்லும் சுகுமாரனின் கூற்று எவ்வளவு உண்மையானது என்பதை மறுக்கவியலாது.

கவிதைக்கு அனுபவமும் ரசனையும் போதுமானவை; வியாக்கியானமும் விமர்சனமும் அவ்வளவாய் வேண்டியதில்லை என கவிஞர் விக்ரமாதித்யன் அவர்களின் கூற்றை, எழுத்தளவில் ஏற்று ரசிக்கிறோமே தவிர இன்றைய கவிதைகள் குறித்துத் தர்க்கமும்; விவாதமுமே பல குழுக்கள் செய்து விமர்சித்துப் பல மனங்களை ஆக்கிரமித்து வருகின்றன.

ஒரு கவிதையைப் படிக்கத் தொடங்கும்போதே அதில் கவிஞனின் குரல்; உண்மையின் வெளிப்பாடு; உணர்வுகளின் எழுச்சி இவைகள் வாசகனுக்குள் உருவாக வேண்டும். கவிஞர் ஆரிசன் இந்த வகையில் இந்தத் தொகுப்பில் அதிக கவிதைகளை நகர்த்தி முன் வைத்துள்ளார்.

உதற முடியாமலும் தடுமாறுகிற மனதின் சலனங்களாகச் சில பதிவுகள் அமைந்திருக்கின்றன.

காண்பதும், காண்பதில் திளைப்பதுமின்றிக் கவிதையில் புரிந்தாக வேண்டியதென்ன? - என்ற லா.ச.ரா.வின் கேள்விக்குறியைப் போல இத்தொகுப்பில் கவிஞர் ஆரிசன் மனதிற்குள் இன்னும் பல கேள்விக்குறிகளை எழுப்புவது மட்டுமின்றி மௌனமாய்ப் பதில்களை விதைத்துப் போகின்றார்.

**நடந்தும் கடந்தும்**
**பசியாறுகின்றன**
**மானுட மனங்கள்**

இதைவிட மானுடத்தின் வலிகளை இன்னும் சுருக்கி உணர்த்தவியலாது.

**பாலை மணல் திரிந்த**
**வெந்நீர் ஊற்றின் தகிப்பில்**
**உணர முடிகிறது.**

எனக் கவிஞர் உணர்வதை வாசகன் வாசிக்கையில் நிச்சயம் அதேஉணர்வைப் பெற முடியும். மனதிற்குள் சலனத்தை ஏற்படுத்துகிற, அநேக உள சலனங்களைக் கொண்டு தீண்டிப் போகிற அழுத்தமான கவிதையிது.

இலக்கியமும் கலையும் இருத்தலியல் அனுபவங்கள். இரண்டும் ஆரிசன் அவர்கள் நடைபயிலும் வாழ்க்கைப் பாதை.

எங்கெல்லாம் நேரம் கிடைக்கிறதோ, அங்கெல்லாம் கவிதையும், கலையுமாகத் தன்னை அதற்குள் திணித்துக் கொண்டவர்.

**.... நீர் அடுக்கில் வாழும்**
**எங்களின் உலகம்**
**அலாதியானது....**

எனக் குறிப்பிடும்போதும் சரி,

**தூண்டிலும்... வலையும்**
**எங்களுக்கானது**
**தூக்குக் கயிறுகள் என்பதை**
**உணர்ந்தே இருக்கிறோம்...**

என்ற வரிகளை நகர்த்தி முன் வைக்கையிலும்,

**சொந்த வாழ்விடத்தில்**
**வாழ்ந்து தொலைத்தாலும்**
**வீசி எறிந்து**
**பிடித்துவிடுகிறார்கள்.**

எனக் கவிதையின் துவக்கத்திலேயே முத்தாய்ப்பாய்ப் பதிவிடுகையில் ஒரு சோகம் கனத்து, விழிக்குள் நுழைந்து நம் இதயத்தைக் கனக்கச் செய்துவிடுகிறது.

**வெடித்துச் சிதறாமல்**
**தொடரும் வாழ்க்கை அபூர்வமாக**
**இருக்கத்தான் செய்கிறது.**

கனத்த இதயத்தின் மௌனத்தையும், கல்லுக்குள் ஈரத்தின் சாட்சியாகக் கல்லெழுத்துக்கள் எனக் குறிப்பிடுவதும், மௌனம் - கற்பாறைகளின் குறியீடு என வரையறுப்பதும் கவிஞரின் சிறந்த ஆளுமையை வெளிப்படுத்துகிறது.

**நன்றி சொல்ல வேண்டியிருக்கிறது**
**காற்றடிக்கும் விசிறிகளை**
**கணக்கில்லாமல்**

**படைத்திருக்கும் இயற்கைக்கு.**

என ஒரு கவிதையில் குறிப்பிடும் அவர், அடுத்து அதே கவிதையில்,

**றெக்கை கட்டிய**
**தென்னை மரங்களின் அழகை**
**தலைகீழாய்**
**ரசித்துப் பார்க்க**
**சுழல் விசிறிகள் பிம்பம்**
**சுற்றிச் சுற்றி வருகிறது.**

என வித்தியாசமாக நுணுகி அணுகும் தன்மை நம்மைச் சிந்திக்க வைக்கிறது.

ஹைக்கூ தளத்திலும், நவீன கவிதைத்தளத்திலும் மிகச்சிறப்பாகப் பல சிற்றிதழ்களிலும் பரவலாக எழுதி வரும் கவிஞர் ஆரிசனின் ஹைக்கூ தொகுப்பு நூல் "குளத்தில் மிதக்கும் தீபங்கள்" திருவள்ளுவர் பல்கலைக்கழகப் பாடத்திட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இவரது திறமையையும், தனித்துவத்தையும் காட்டுகிறது.

குறிப்பிட்டுச் சொல்ல நிறைய கவிதைகள் இத்தொகுப்பில் அதிகம் இருக்கின்றன. இவரின் கவிதைகள் படித்து முடித்ததும் ஒரு நிறைவை தந்து போகின்றன.

வாசிக்க வாசிக்க, வாசித்து முடிக்க மேற்சொன்னவைகள் உங்களுக்கே இது புரியும்.

காவனூர் ந. சீனிவாசன்

ஆசிரியர்,
அருவி, காலாண்டிதழ்,
திமிரி, வேலூர் மாவட்டம்.
கைபேசி : 96008 98806.

□

# என்னுரை

இயற்கையும் சமூகமும் கவிஞனுக்கோ இரண்டு கண்கள்.

ஹைக்கூவின் அரிச்சுவட்டில் இருந்து வளர்ந்து
புதுக்கவிதை, நவீனமென
கவிதைகளை
சுவாசித்துக்கொண்டிருந்த
எமக்கு ‘கனவற்றவர்களின் கனவு’
ஒரு புதிய கவிதை விடியல்.
கனவுகளின் மிச்சத்தை
அளந்து பார்க்க முடியாமலும்,
நனவுகளின் படிகளில் நின்று
ரசித்துப் பார்க்க முடியாமலும்,
கற்பனைக் குதிரை கடந்து செல்லும் பயணத்தில்
யதார்த்த மை தொட்டு
எழுதும் எழுதுகோளில்
காகிதப் பரப்பெங்கும்

கண்ணாமூச்சி விளையாடும் அந்தக் கனங்களிலிருந்து மீட்டெடுத்த கவிதைகளே இந்தத் தொகுப்பு.

மேலும் இந்நூலுக்கு ஆடை, அணிகலன்கள் பூட்டி, அழகு பார்க்க ஆயத்தமாக உதவியிருக்கிறது கவிதை ஆளுமைகளின் அணிந்துரை நயம்.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள்.

படத்தின் அழகும் படைப்புகளின் அழகும் இப்போதெல்லாம் கேமராக்களில் தெரிவதை விடவும், முகநூலில்தான் விதவிதமாய்ப் பதிவிறக்கம் செய்து பகிரப்படுகிறது. இது உலகம் முழுவதும் பார்க்கவும்படுகிறது.

இந்த வகையில் கடந்த ஆண்டில் முகநூலில் எழுதிய கவிதைகளும், சிற்றிதழ்களில் எழுதிய கவிதைகளுமாக இந்த ’கனவற்றவர்களின் வாழ்க்கை’ கவிதை நூல் பதிவாகியுள்ளது.

இதற்காக...

கனிவுக்கும், தோழமைக்கும் பஞ்சமற்ற

தமுஎகச-வின் எழுத்தாளர்களுக்கும்

செம்மலர் மாத இதழ் ஆசிரியர்,

எழுத்தாளர் எஸ்.ஏ.பெருமாள்

கவிஞர் இரா.தெ.முத்து

மின் இலக்கியப் பூங்கா கவிஞர் சிவ.சிவக்குமார்,

கவிஞர்கள் வலம் வரும் அருவி காலாண்டிதழ் ஆசிரியர் கவிஞர் காவனூர் ந. சீனிவாசன் இவர்களுடன் முகநூல் மற்றும் சிற்றிதழ்கள் என மேலும்

அழகிய நூலாக்கத்தில் தனது அழுத்தமான முத்திரை பதிக்கும், பூங்குயில் சிவக்குமார், முனைவர் ம.மகாலட்சுமி

கணினி அச்சுக்கோர்ப்பில் ஆளுமை செலுத்தும் வந்தவாசி டெக்னோ சிஸ்டம்ஸ் மற்றும் ரிஷி கிராபிக்ஸ்

அச்சாக்கம் செய்த சென்னை ஜோதி பதிப்பகம் ஆகியோருக்கு என் அன்பின் நன்றிப் பூக்கள்.

– ஆரிசன்

□

## கவிஞரின் பிற நூல்கள்

**ஹைக்கூ நூல்கள்:-**

குளத்தில் மிதக்கும் தீபங்கள் - 2002

(திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில் இளங்கலைத் தமிழ்ப் பாடநூலாக இடம் பெற்றது)

நட்சத்திர தாகம் - 2003

புல்வெளி ரகசியம் - 2007

மயிலிறகின் முத்தம் - 2012

உழைப்பின் நிறம் கருப்பு - 2013

குழந்தைப் பாடல்கள்

பாடும் சின்னப் பறவைகள் - 2006

பள்ளிக்கூட மைனாக்கள் - 2010

பாடல்கள்

காற்றில் மிதந்த மொழி 2007

புதுக்கவிதை

உயிர் நிலம் - 2004

மின்சாரப் பூக்கள் - 2007

வேட்கையின் நிழல் - 2010

□

# சமர்ப்பணம்

**எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன்**

உழைப்பாளியின் பிழைப்பை எழுதியும்
பெண்மையைப் பெருமையாக்கியும்
உண்மையை விரித்துச் சொல்ல
தயங்காமலும் எழுதியது.
உன் பேனா.

உயிர் விளையும் நிலங்களில்
பயிர்கள் பாழாய்ப் போக
செங்கல்லும் சிமெண்ட்டும்
கூடிக்குலாவி
ரியல் எஸ்டேட்டில் சிரிக்கும் போது
மண்ணின் சுவாசத்தை
பெண்ணுக்குள் விதைத்தாய்...
படைப்புகளின் தீர்க்க தரிசனத்தில்
உன் புகழ் வாழும்
முற்போக்கு முனைகளில்
உன் சிந்தனைக் கீற்று
சிறகடித்துப் பறக்கும்....

**இயக்குநர் கே.பி.**

**நீ... செதுக்கி**
**சிலையாக்கி**
**அழகிய**
**சிம்மாசனம் தந்தாய்**
**வணங்கி மகிழ்ந்தது**
**தமிழ் சினிமா...!**

**பூமியை விட்டு**
**வானத்தைத் தொட**
**பறந்து சென்றாலும்**
**துரத்திக் கொண்டே வருகிறது**
**கவிதை...!**

□

# ஆழி சூழ் உலகு

பாலை மணல் திரிந்த
வெந்நீர் ஊற்றின் தகிப்பில்
உணர முடிகிறது
பொதி சுமந்து பயணிக்கும்
ஒட்டகங்களின்
உயிர்ச்சுவாசத்தை.

திரட்சியான புவியின்
மார்பகங்களின் பச்சையத்தை
வானம் ரசிக்க
பாதைகளை சுவாசித்து
நடந்தும், கடந்தும்
பசியாறுகின்றன
மானுட மனங்கள்

பசிப்பிணி தீர்க்கும்
பச்சை வயல்களில்
வாழ்வின் தீர்ப்புகள் இன்னும்
திருத்தி எழுதப்படாமலே
தீர்க்காயுசு இன்றி
செத்து மடிகிறது...
வயலின் மிச்சம்

**பிரபஞ்ச வெளியின்**
**கழிவுகளைக் காணாமல் செய்யும்**
**தொழிற்சாலையாக**
**ஓய்வின்றி ரசிக்க வைக்கின்றன**
**வனப்பாப்புகள்.**

**ஓசையின் ஒய்யாரத்தை**
**தரை தொட்டுப் பார்க்கும்**
**அலைகளின் குவிமையத்தை**
**தன் ஆழத்திற்குள்**
**அழுத்தி வைத்திருக்கும்**
**நிச்சலனமற்ற**
**மையப் பரப்பைச்**
**சுற்றிச் சுழல்கிறது**
**ஆழிசூழ் உலகு...!**

# நீர்க்குமிழி

மலை முகட்டின் மௌனத்தை
களவாடியது காற்று

பூவின் வாசத்தை அறியாமல்
தலை தெறிக்க ஓடிவந்து
தவிப்பின் மிச்சத்தை உணர்த்தியது
பட்டாம்பூச்சி.

கலைஎழில் கொஞ்சும்
ஜீவநதியின் அழகில்
வானம் வசியப்பட்டுவிட்ட
ரகசியத்தை
இன்னும் சொல்லமுடியாமலே
கரைகிறது பிரபஞ்சம்...

உலை கொதிக்கும் நெருப்பை
உரசிப் பார்க்க முடியாமல்
வெளியே தவிக்கிறது
கவிதைக்கான கண்ணி...

வலைக்குள் சிக்காத
வயோதிகத்தை எண்ணி
தூண்டிலைச் சுற்றி
சிரித்து விளையாடி
மீன்களைப் பார்த்து நகைக்கிறது
வாழ்வெனும் நீர்க்குமிழி...!

# கயிறறுந்த பட்டம்

மல்லாந்து படுத்தும்
வானத்தைப் பார்க்க முடியாமல்
மௌனித்திருந்தன கண்கள்.

வில்லேந்திய
அம்புகளோடு உதயத்தின்
வெளிச்ச விழுதுகளை
புவியிறக்கியபடி
பயணித்தது சூரிய பிம்பம்

கல்லெறிந்து
மரத்திலிருந்து
உதிராத கனிகளை எண்ணி
தப்பிய இலக்கினை
சீராய்வு செய்தது
கவண்கற்கள்.

சொல்லம்புகள்
பிரித்துவிட்ட
மனங்களை மட்டும்
தைக்க முடியாமலே
பறந்து கொண்டிருக்கிறது

ஊசிக்குள் நுழையாத
கயிறறுந்த பட்டம்...!

# காற்றடிக்கும் விசிறி

றெக்கை கட்டிய
தென்னை மரங்களின் அழகை
தலைகீழாய்
ரசித்துப் பார்க்க
சுழல் விசிறிகள் பிம்பம்
சுற்றிச் சுற்றி வருகிறது

நன்றி சொல்ல வேண்டியிருக்கிறது.
காற்றடிக்கும் விசிறிகளை
கணக்கில்லாமல்
படைத்திருக்கும்
இயற்கைக்கு...!

# உயிர் ஆய்தம்

வார்த்தைகளின் இடையில் சிக்கி
மொழியின் அர்த்தத்தை
விளங்க வைக்க முடிகிறது என்னால்...

உயிரின் கடைக்கோடியில் இருந்து
நானே தீர்ப்பெழுதுகிறேன்...

அடுப்பின்
சமதளத்திலும்
எனக்கான இடம் கிடைத்த பின்னரே
தீச்சுவாலையின் அழகை ரசிக்க முடிகிறது

வேகும் பாத்திரங்களுக்கு
என் மீதான அக்கறை தனியானது தான்
உயிர்ப்பிறப்பில் உன்னதமான
மானுடப்பிறப்பில்
மூன்றாவது கண்ணை
உற்பத்தி செய்த சிவனின் தத்துவமும்
எனக்கானது தான்...

தமிழின் பெருமைக்கும்
பேர் சொல்வதற்கும்
என்னிடமே தகுதி உண்டு

உருக்குலைக்காத ஒற்றுமைக்கும்
உறுதிப்பாட்டுக்கும் நான் இன்றி
பொருளின் அர்த்தம் எப்போதும்
தமிழுக்குப் புலப்படாது.
யாரையும் இம்சிக்காத
இடைச்செருகலில் நான்
இனித்துக் கரைந்து போவது
யாருக்கும் தெரியாது

வன்முறைக்கான கருவிகள
என் பெயரிலே
எகத்தாளம் போடும்
ஒரு வன்முறையும் தெரியாமல்
மொழியின் கௌரவத்தைக்
காப்பாற்றும் எனக்குப் பெயர் மட்டும்
எப்படியோ
வைத்துவிட்டார்கள்
ஆய்தம் என...!

## மழை கணக்கு

நெருப்பின் உக்கிரத்தை
நிமிர்ந்து பார்த்தபடியே
நடந்து செல்கிறேன்.

சூறைக்காற்றின்
சூது தெரியாமலும், புரியாமலும்
போருக்குத் தயாராகின்றேன்.

கனமழையின் கட்டுக்கடங்காத
ஊழிப் பெருவெள்ளத்தில்
நீந்திக் கரை ஒதுங்கும் நேரத்தில்
சுழலில் சிக்கிய கால்களின்
பரிதவிப்பை
கண்களின் மழை
கணக்குத் தீர்க்கிறது
என்று புரியவில்லை...

சிறகு முளைத்து விட்டதென
ஆசையில் பறக்க நினைத்து
மனிதப் பிறப்பை மறந்து போனேன்
நிலத்தில் கால் ஊன்றி
வாழும் வாழ்க்கையின் பிடிமானத்தை
பிரதிபலிக்கத் தெரியாத
இருளாண்டியாக...!

# நெசவுக்கூடம்

விலைக்கு அப்பாலிருந்து
பயணிக்க முடியாமல்
பாசாங்கு போடுகிறது.

வயல்களை நாசமாக்கும்
எலிகளின் கண்களுக்கு
தப்பாமல் சிக்கி விடுகிறது
சிலந்திகளின் கூடுகள்.

நெசவாளிகளின் பாவுகள்
அறுந்து வாழ்வை சிதைத்த
துக்கங்களின் அணிவகுப்பாக
கூடுகள் கட்ட
விருப்பமின்றி
வெளியேறிக் கொண்டிருக்கின்றன
நெசவுக் கூடங்கள்.

# மீன்களின் கண்டம்

தூண்டிலும்... வலையும்
எங்களுக்கான
தூக்குக் கயிறுகள் என்பதை
உணர்ந்தே இருக்கிறோம்.

சொந்த வாழ்விடத்தில்
வாழ்ந்து தொலைத்தாலும்
வீசி எறிந்து
பிடித்து விடுகிறார்கள்
இன்னும் எங்களை
துரத்திக் கொண்டுதான்
இருக்கிறது
உணவுக்கான வேட்டை.

தூக்கு தண்டனைகளை
நாங்களும் –
வன்மையாக கண்டிக்கிறோம்.

நீர் அடுக்கில் வாழும்
எங்களின் உலகம்
அலாதியானது
இருட்டு உலகத்தில்

வெளிச்சத்தைப் பார்த்து
தொடரும் பயணத்தில்
மறைக்க முடிவதில்லை
மீன்களின் கண்டங்களில்
எங்கள் இருப்பை...!

எங்கள் கோரிக்கைகளும்
மானுடத்தின் கோரிக்கைள் போல
எடுபடாமலே போய்விடுகிறது
பிரபஞ்சத்தில்...

# அறியாமை

மேகம் கலைந்து
வெள்ளி வானமாய்
பளிச்சிடுகையில்
ஓ வென்று அழுதுபுலம்பியது
கடலுக்குள் கருமேகங்கள்...!

மண்ணோடு
வேர் பிடுங்கிய செடியிலிருந்து
பறிபோனது
மனதின் மௌனம்...!

காலத்தின்
கணிக்க முடியாமல் போனது
மூடத்துவத்தின் அறியாமை...!

முள்மேல் விழுந்த சேலையை
சேதாரமின்றி
எடுக்கத் தெரியாமல்
முனகுகிறது மனம்...!

திரௌபதியின் நிழலைத் துரத்தியபடி
இன்னும் துரியோதனாதிகள்

**துகிலுரியில்**
**கங்கை மைந்தர்கள்**
**காணாமலே போகிறார்கள்...!**
**தர்மத்தின் வாழ்வுதனை**
**சூது கவ்வும் என்று**
**சொன்னபடியே...!**

# முகாரிகளின் முகம்

விருப்பங்கள்
யாருக்கும் இனிமையானது தான்
வெறுப்புகளின் மீது மனங்கள்
பயணம் செய்யாத வரை
திருப்பங்கள் யாருக்கும்
நேர்ந்து விடும் தான்
சிரத்தைகளின் ஊடே
சிறப்புகளின் பயணமும்
திசை தெரியாமல்
தீர்மானிக்கும் வரை...!

அச்சு அசலாக
அன்பின் பயணத்தை
அவதூறு கிளப்பி
அழித்து விடும்
ஆரோகணங்கள் இருக்கும் வரை
முகாரிகளின் முகம்
பிரகாசித்தே இருக்கும்
சோகத்தைக் களையெடுத்து
சுவாரஸ்யங்களை
உட்கொள்ளாதவரை...!

# மத யானைக் கூட்டம்

துயரத்தின் வடுக்களை
துரத்திவிட முடியவில்லை
துளியும் இரக்கமின்றி
தூவானத்தின் வெளிச்ச விழுதுகள்
தூக்கத்தோடு கிளை பரப்பி
தூசுகள் சிறகு விரிக்க
துப்பி எறிந்த இரவை
தூர்த்து சிரித்தது நிலவு

துவண்டு போகாமல்
தூரத்திலிருந்து நேசித்தது
துட்டு துக்காணியின்
துலாபாரத்தை
தூக்கி சரிசமமாய் நிறுத்த
துன்பியல் நாடகம் அரங்கேறி
துடைப்பம் பெருக்கிய குப்பையாய்
தூய்மையாகாமலே
தூரிப் போனது
துவைத்தெடுக்கும்
துறு... துறு... மத யானைக் கூட்டம்!

## மதம் வளர்க்கும் மதம்

இந்து மதம்
இஸ்லாமிய மதம்
கிருத்துவ மதம்
இப்படி எல்லா மதங்களும்
ஒரு போதும்
ஆதரிக்கவில்லை
தீவிரவாதத்தை என
அறிக்கை விடுபவர்களிடம்
கேட்கத்தான் வேண்டியிருக்கிறது

தீவிரவாதம்
பிறக்குமிடம்
எதுவென்று...?

## வறுமை

சக்கைகளை
உரக்கச் சொல்லி
அழுதவனை
பிழிந்தெடுத்து சிரித்தது
சாறு...!

## முதிர் கன்னி

தனிமையில்
விதைத்து... வளர்த்து...
பயிராக்கி
அறுவடைக்கு ஆளானபின்
அட்சதை போட
ஆட்களே இன்றி
தனியாய் தவிக்கிறது
புவியில் அழுதபடி
நிலா...!

## ஆயிரங்கால் பூதம்

தொலை தூர தொடர்புக்கு
அறிவியல் வளர்ந்து
காதுகளுக்கு நனவாய் இருந்தது...

செல் எனும் மாயமான்
செய்திப் பரிமாற்றத்தில்
சிகரம் தொட்டாலும்
பேசிப் பேசியும்
தீர்க்க முடியாமல் தான் இருக்கிறது
இன்னும் தொலைதூரப் பிரச்சனைகள்...
காதல் முதல்
காசி யாத்திரை வரை
சுதந்திரம் தொட்டு...
சுடுகாடு வரையும்...!

## நிராசை

சுண்ணாம்புச் சுவற்றில்
மணல் சலித்துக் கொண்டிருந்த
அம்மா...

உடைந்து விழுந்தாள்...!
மகன் வீசியெறிந்த
ஒற்றைக் கல்லில்

தகர்ந்தது...
கனவுக் கோட்டையின்
கண்ணாடி பிம்பம்...

## தோல்வியின் படிக்கட்டில்

வெற்றியின் விளையாட்டில்
நிராசையினை
சலித்துக் கொண்டே போகையில்
ஆசையின் படிக்கட்டில்
சுலபமாகிறது
வெற்றியின் பயணம்.

# ரயில் பயணம் போல...

சில கட்சிகள் கவர்ன்மெண்டுக்கு
எழுதிய கடிதங்களும்...
சில தொண்டர்கள்
கட்சிகளுக்கு
எழுதிய கடிதங்களும்
ரசித்து ரசித்து
படிப்பது என்னவோ
குப்பைத் தொட்டி தான்...

அபூர்வமாய்
படிக்கப்பட்டாலும்
கிழித்து...
கசக்கி வீசப்படுகிறது
கால் பதியும் வீதிகளில்...!

உயிர்ப்பைப்
புதுப்பித்துக் கொள்ள
கட்சிகளும்... தொண்டர்களும்
போராட வேண்டியிருக்கிறது
இருப்பைத் தக்க வைத்துக் கொள்ள...

தண்டவாளங்களின்
அமைதியினை
தகவமைத்துக் கொண்டே
பயணிக்கும்
ரயில் பயணம் போல...!

# திரு விளக்கு

கானம் பாட
வழி விடுங்கள் அதில்
கீதம் நனைய
இசை கொடுங்கள்

வானம் முழுக்க
இடி முழக்கம் புவியில்
வந்து விழுகிறது
மழை வணக்கம்.

பனிமலை எங்கும்
தமிழ் முழக்கம் தரும்
கனிச்சுவை எங்கும்
மொழிப் பதக்கம்.

கருவிழி எங்கும்
ஒளிவிளக்கம் கண்
நீருக்குள் அழியும்
நோய் புழுக்கம்.

உருவத்தைக் காட்டும்
ஒளி விளக்கம் கண்
ஆடியில் எரியும்
திரு விளக்கும் ...!

# ஆண்டான் அடிமை

கருங்கல் கால்வாய்
குளிப்பாட்டிய பின்னும்
கூழாங்கல்லின் ஆதிக்கம்
அடங்கவில்லை.

ஆண்டான் அடிமை
வெள்ளையினம் கருப்பினம்
தொழிலாளி முதலாளி
சோசலிஷம் ஏகாதிபத்யம் என
ஒவ்வொன்றும் தனது
எதிர்ப்பதங்களில்
வலுவடைந்து வருகின்றன.

ஆதி வார்த்தைகள்
உருக்குலையாமல்
கற்களின் இசைவழியே
சிதறிக் கிடக்கும்
பாடலின் ரீங்காரத்தை
சதா பாடிக்கொண்டிருக்கிறது
உழைப்பு...

தீண்டாமை வேள்வியில்
பாதரட்சை படாத
அகலிகைகளுக்காக...

# அந்திம வாழ்வு

ஒரு மாலைப் பொழுதில்
மரக்கிளையில் உயிர்த்திருக்கிறது
பறவை...

பறந்து களைத்த
சிறகின் அனுபவத்தை
தன் பரிபாஷையில்
உரையாடிக் கொண்டது

விசிறிக் கொண்டிருக்கும்
இலைகளின் விசித்திரத்தை
வியந்து... வியந்து...
ரசிக்கிறது
அரசவை சிம்மாசனத்தில்
தானும்...
ஒரு ராஜா போல...!

## ரியல் எஸ்டேட்

உரங்கள்
தின்று தீர்த்த
மிச்சத்தை
விழுங்கிக் கொண்டிருக்கிறது
ரியல் எஸ்டேட்...!

# அட்சய பாத்திரம்

தீப ஒளியில்
மறைந்து போன
மகாத்மியங்களை
தேடிக் கொண்டிருக்கிறேன்.

கோப வெளிச்சம்
குளிர் நிலவாய்
சுருங்கிப் போன
அகல் விளக்கின்
மௌனத்தை
ஆராதிக்கும்
வள்ளல் பிரானை
கண்ணீரில் நனைய விட்டு

குளிப்பாட்டிப் பார்க்கிறேன்
வாடாத அதி அற்புதப் பயணத்தில்
பௌர்ணமி வெளிச்சம்
பாயும் இடமாக
உச்சி வானமே
ஊர்வலத்தில் வருகிறது...
பசிப்பிணி தீர்க்கும்
அட்சய பாத்திரத்தோடு...!

# கார்த்திகை தீபம்

அகல் விளக்குகள்
அணி வகுத்து
வீதிக்கு வந்தன.
வீடெங்கும் உற்சவமாய்
ஒளித் திருவிழா.

மெல்லிய ஒளியின்
கீற்றுக் குவியல்
மிதமாய் மனதை
வசியமாக்குகிறது.

மெகா ஒளியில்
நனைந்து எழுந்தாலும்
மெல்லிய ஒளியே
மீண்டெழ வைக்கும்

வணங்கி மகிழும்
அகல் விளக்குகள்
அதிசயப் பறவைகளாய்
சிறகு விரிக்கும்.

**அக்கினித் தலத்தின்**
**அவதானிப்பினிலே**
**தீப அலைவரிசை**
**திக்கெட்டும் இளைப்பாறும்.**

**கார்த்திகைத் திருநாள்**
**கலங்கரை விளக்காய்**
**கண்ணுக்குத் தெரியும்**

**திசைகளின் தீர்ப்புகளை**
**ஆயிரம் அர்த்தங்களோடும்**
**மௌனித்தே எழுதுகிறது**
**மலை உச்சியில்**
**அகண்ட தீபம் ...**

**கல்குவாரிகளின் கண்களை**
**உறுத்தாமலே...!**

# கல்லெழுத்துக்கள்

கணப் பரிமாணம் எல்லாமே
மௌனத்தின் சாட்சியாக
உறைந்திருக்கும்

கற்பாறைகளின்
குறியீடு தான்
கணத்த இதயத்தின்
மௌனம்

வெடித்துச் சிதறாமல்
தொடரும் வாழ்க்கை
அபூர்வமாக
இருக்கத்தான் செய்கிறது
கல்லுக்குள் ஈரத்தின்
சாட்சியாக
கல்லெழுத்துக்கள்...!

# மௌனமும் கண்ணீரும்

எப்போதோ மனம்
வேதனைத் தீயில்
வெந்து மடிய
உனக்கான மௌனத்தை
இன்னும் கலைக்காமலே
வன்மையாகிறாய்...

வல்லமைதான்...
உன்
மௌனமும் கண்ணீரும்
புரிந்து கொள்ளவே
வாழ்வில் ஓய்ந்து போனது
வயது...

நரை கூடி
எய்திய கிழப்பருவத்திலும்
காத்துக் கிடந்து
சுகம் தருகிறது
உனக்கான கவிதை ...!

# கந்து வட்டி கணக்கு

காலனா அரையனா
முக்காலனா வெல்லாம் போயி
நூத்துக்கு
நாப்பது அம்பதுன்னு
கந்து வட்டி கணக்காச்சி
ஒடம்பு நோகாம
ஒக்காந்த எடத்துலயே
வந்து விழும் மாலைகளாக
கந்து வட்டி.

அன்னாடங்காய்ச்சியிலயிருந்து
ஆபிசில வேலை பாக்கும்
அதிகாரிங்க வரையிலும்
அவசரத்துல
எறங்கி விடுறாங்க
பாழுங்கிணத்துல
வீதி தொடங்கி வீடு, கட
ஆல, தொழிற்சால
எல்லா எடத்திலயும்
நீக்கமற நெறைஞ்சிருப்பாங்க.

பணத்தை டீ வீலர் தொடங்கி
போர் வீலர் வரைக்கும்

அடியாளுங்க பலத்தோடு
தந்துட்டுப் போவாங்க
பேராச பெருவியாதி
கந்து வட்டிக்காரங்கள்
அறிமுகப்படுத்த
ஆங்காங்கே ஒரு கூட்டம்
அசலா இருக்கும்.

வட்டி வாங்கும் போத்ராஜாக்கள்
அனாமத்துக்காருங்க மட்டுமல்ல
இப்ப ஆபிசிலயும் இருக்குறாங்க
கந்து வட்டி சட்டத்துக்கே
கம்பி நீட்டும் இவங்களுக்கு
காவல்துறையும்
கனகாபிஷேகம் செய்யும்
கப்பம் நீக்கமற நெறைஞ்சிருக்கும் எடமாக
காவல் நிலையமும்
கணக்கில் சேரும்...

குற்றவாளியைச் சொல்லி
புகார் கொடுத்தும்
கண்டுக்காம இருந்த
காவல்துறை
இப்ப பதில் சொல்லியாகணும்
காமம் சொரக்காது
கந்து வட்டிக்காரனுங்களுக்கு
கோவணத்துலயும்
முடிஞ்சி வச்சிருக்கும் ஆண்மை என்னவோ
வட்டிப்பணம் தான்...

**நேருக்கு நேராய் குத்தும் தைரியமின்றி**
**கொலை கும்பல் வைத்து**
**கோபியை தீர்த்த கூட்டம்**
**பதில் சொல்லியாக வேணும்...**

(நெல்லை கோபி ஆட்டோ சங்க தலைவர் படுகொலை நினைவாக)

# காதல்

இரு சக்கர வாகனத்தில்
தந்தையோடு செல்கிறான்
மகன்...

துரத்திக் கொண்டே வருகிறது
காதல்.

வேகத்தடையிலும்
வீழ்ந்து விடாமல்
தந்தையின் பயணத்தை
பின் தங்க வைத்து
முந்தி வந்து
நின்று சிரிக்கிறது
ஃபாஸ்ட்புட் உணவைப் போல
செரிக்கிறதோ இல்லையோ...
வயிறைப் போல் இல்லை
மனம் என்பதை
உணர மறுத்தே
தொடர்ந்து கொண்டு தான்
இருக்கிறது
தினம் தினம்
காதல்...!

# கள்ளத் தோணி

கறுப்புப் பணத்தை
கடலில் இருந்து எடுக்க
பூதம் ஒன்று
புறப்பட்டு வந்தது...

தெரு ஓரம் வாழும்
அன்றாடங்காய்ச்சி முதல்
மாடி வீட்டு மைனர் வரை
மூணு லட்சம்
தரமுன்னூறு முறை ஏலம் போட்டது...

முக்கி முங்கி எ(முந்)டுத்தும்
மூட்டை மட்டும் கிடைக்கவில்லை
முடிந்தால் நீதிமன்றத்தை
கடலுக்கு அழைத்து வர உத்தரவும் போட்டது
கடலுக்கு வந்த நீதிமன்றமும்
கவனத்துடன் தீர்ப்பு சொன்னது...
தேசத்தை கவலைக்கிடமாக்கியது.
கண்டுபிடித்து உத்தரவும் போட்டது
ஆழிப்பிரளயமாய் ஆங்காங்கே
முதலைகள் ஊர்வலம்
முடிந்த மட்டும் நடந்தது...

நீர் யானைகள் ஊர்வலம்
நிம்மதியாய் நடக்கிறது
திமிங்கிலங்களின் ஊர்வலம்
திசை எட்டும் நடக்க இருக்கிறது.
பூதத்தை விழுங்க.

கண்டம் விட்டுக் கண்டம் வந்து
கடலுக்குள் குமுறி அழுத ஓலத்தில்
கடல் கடந்து ஓடிப்போனது பூதம்...

மூணு லட்சம் முக்கல் முனகலோடு
முந்தானை முடிச்சிலிருந்து
விடுபட
முடியாமலே இருக்கிறது
முதலைகளின் பேய் மழையாய் இருக்கும்
முதலாளித்துவம்...!

# விடுதலை

தனித்து விடப்பட்டு
அனாதைகளாய்
அகதி முகாம்களில்
அவஸ்தை வாழ்க்கை
வாழ்ந்து வருகிறோம்...

எங்கள்
சொந்த மண்ணின் சுவாசத்தை
வேரறுத்து அந்நிய மண்ணில்
பதியம் போட்டார்கள்...
தாவரங்கள் அல்ல
மனிதர்கள் என்பதை மறந்து...!

வேரோடு சாய்த்தாலும்
வேதனை தீர்ந்திருக்கும்
நாரோடு எங்களை
மணக்க முடியாமலே
செய்துவிட்டது
மரணத்தின் வேதனை...

நாடு விட்டு நாடு போயும்
நகர மறுக்கிறது
விடுதலை...!

# தீக்கங்குகள்

வாகனங்களின் நெரிசலில்
விழி பிதுங்கி நிற்கின்றன
சாலைகள்

மேகங்களின் கூட்டத்தில்
மழையின் ஊர்வலத்தை
ரசித்துப் பார்க்கிறது
பூமி.

காகங்களின் கரைதலில்
இரக்கத்தின் சுவடுகளை
வரைந்து செல்கிறது
பசி.

சோகங்களைச் சொல்லி மாளாமல்
இனித்தும்... கசந்தும்
இழையோடிச் செல்கிறது
வாழ்க்கை...

தேகத்துக்குள் துடிக்கும்
இதயத்தின் ஓட்டத்தை
நெய்து ரசிக்கிறது
உயிர்.

**தாகத்தின் தவிப்பை
துள்ளி விளையாடி சபிக்கிறது
விக்கல்**

**யாகத்தின் பரப்பை
யோகமாய் உரிக்கிறது
தீக்கங்குகள்.**

**வேகத்தின் சூட்சுமத்தில்
விளையாடி சிரிக்கிறது
வெற்றியின் மரணம்
விதவிதமாய்ச் சொல்லி
வீசி எறிந்தாலும்...**

**செறித்துச் சிறக்காமல்
வார்த்தைகளை விட்டு
வெளியில் நின்றே சிரிக்கிறது
கவிதை...!**

(கவிஓவியா, ஜனவரி 2015)

# படிக்காத மேதைகள்

முட்டாள்களின் கதை அறிந்து
மூச்சு விடக் கற்றுக் கொண்டோம்
அடியாட்களின் கதை அறிந்து
அச்சு முறிக்கக் கற்றுக் கொண்டோம்
படியளக்கும் எஜமானின்
கதை அறிந்து
திசையெங்கும் பயணிக்கக்
கற்றுக் கொண்டோம்

பார்த்த மாத்திரத்தில்
பரவசம் அடையும்
உணர்ச்சியை கற்றுக் கொள்ள
பயிற்சிக்குப் போகிறார்கள்
படிக்காத மேதைகள்...
நாடுகள் விட்டு
நாடுகள் தொட...!

# வாழ்க்கை

சோகம் அப்பிய வானத்தை
சிறை பிடித்துச் சிரிக்கிறது
கார்மேகங்கள்.

மகிழ்ச்சி அப்பிய பூமியை
தாங்கிச் சிரிக்கின்றன
காடுகள்...

கொட்டும் அருவியின் குளிர்ச்சியில்
உஷ்ணத்தின் உக்கிரம்
உருக்குலைந்து போகிறது
காற்றின் சுகத்தில்
ஜீவிக்கிறது உயிர்

கூட்டுக் களவாணித்தனத்தில்
கொள்ளை போகிறது இயற்கை
என்றாலும் –
இன்ப துன்பமெனும்
இரு துருவங்களையும் கடந்து
ரசிக்கவும் படிக்கவும்
பழகவும் முடிகிறது
வாழ்க்கை...!

# வைட்டமின் – II

தேவையற்ற சர்ச்சைகளில்
எப்போதும் திக்கு முக்காடுகிறது
அரசியல்.

தேவையான சர்ச்சைகளில்எப்போதும்
திக்குமுக்காடாமல் பயணிக்கிறது கலை.

மனதை மறுவாசிப்பு செய்து
மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறது
இலக்கியம்.

முகத்தோற்றத்தை
மாற்றியும் மாற்றாமலும்
விவாதக் களத்தில் விரசமாகிறது
பண்பாடு.

எவ்வளவு படித்தும்
எத்தனை அறிந்தும்
ஏற்றத்தாழ்வோடு
சமூகத்தை சிறை வைக்கிறது
வைட்டமின்–ப
எல்லாவற்றையும்

**விடுவித்து மகிழும்**
**கம்யூனிஸத் தத்துவம்**
**விடுதலையாகி வெளியே வந்து**
**வேர் பிடித்து வளர்கிறது**
**வேள்வித் தீ பரப்பி...!**

# விலைவாசி

பசிக்குப் பாலும்
தாகத்துக்குத் தண்ணியும்
பிறந்த எல்லா உயிரினங்களுக்கும்
இன்றியமையாத ஜீவன்களாக
பசியின் பாலபாடம் சொல்லும்
குழந்தைகளையும்
நோயாளிகளையும்
கவனிப்பாரற்று
கஜானாவுக்குப் பணம் வரவே
கணக்குப் போடுகிறது அரசு.

வெறுந்தண்ணியோ
வெள்ளைத் தண்ணியோ
ஆட்சியைக் கரையேற்றும் ஓடங்களாக
பயணிக்கிறது திக்கெட்டும்...
கலங்கரை விளக்கமாக
சுழன்று கொண்டிருக்கிறது
விலைவாசி
கிலோமீட்டர் கணக்கில்...!

பாலின் நிறம்
கருப்பாகவே தெரிகிறது
உழைக்கும் (தெருக்)கோடி...
கோடி... கோடி... மக்களுக்கு...!

# நெசவின் பிரம்மாக்கள்

தார்க்குழலின்
நூலிழைகள்
விழுதுகளாய்ப் பறந்து... பறந்து...
வேட்டியாகி
அம்மணம் மறைத்து அழகு பார்க்கிறது

தாவிப் பறக்க முடியாமல்
“கா” குழிக்குள் இறுக்கமாகிப் போகிறது
வாழ்க்கை

ஒட்டி எலும்புகள்
உடைந்து போகாமல்
உருவம் மட்டுமே
அடையாளப் படுத்துகிறது
நெசவாளியை...

தலைமுறைக்குக் கற்றுத் தர முடியாமல்
விழி பிதுங்கிய நிலையில்
குடும்ப பிழைப்பின் சோகம்
கட்டுத்தறியும் கவிபாடும்
கம்பனின் பாட்டை ரசிக்க முடியாமல்
படமெடுத்துப் பார்க்கிறது
தாராளமயப் பாம்பு...

**விஞ்ஞானம் வளர்ந்து**
**காட்டு வாழ்க்கைக்குத் திரும்பிடுமோ**
**எனும் அச்சத்தில்**
**நெசவின் பிரம்மாக்கள்**
**வீதிகளெங்கும்**
**நடக்க சக்தியின்றி**
**நாடு வலம் வருகிறார்கள்**
**பிச்சைப் பாத்திரங்களோடு ...!**

# பிணி தீர்க்கும் கஷாயம்

ஆறு குளம் ஏரிகள்
காணவில்லை
ஆக்கிரமிப்புகளால்

மலைகள்
மண் தரையாக்கப்படுகின்றன

தொடர்கிறது
விசாரணைகள்

துவளாமல்
சுற்றித்திரிகிறது
எதிலும் ஊழல்

லஞ்சம் தவிர்த்து
நெஞ்சம் நிமிர்த்தும் பணி
தொடர்ந்து
கொண்டுதான் இருக்கிறது
ஊழலுக்கெதிரான
கஷாயமாக...
சில அதிகாரிகளின் பணி
இன்றும்...

# நட்பு

உனக்கான உயிரை
இதயத்தின் நட்பில்
இருத்தி வைத்துள்ளேன்

நட்பின் முதல் நாளிலே
மௌனத்தை மறுதலித்து
இசையின் வழியே
பேசத்துவங்கினேன்
மகிழ்ச்சியை ரசித்து
விடைபெற்றுக் கொண்ட பின்னும்
நிதானமாய் செவிகளை
இங்கேயே இருத்திப் போனாய்
மொழி பேசி
விழுங்கிய எச்சிலின் புன்னகையை
அவ்வப்போது ரசித்தாய்
நட்பைக் காப்பாற்றிக் கொள்ள
உன் கண்களின் தூது
எப்போதும் வீரத்தை
எழுப்பி நிற்க வைக்கும்
வார்த்தையின் மணத்தை
முகர்ந்தபடி மெய்யின் வியர்வை
விசாரணைக்கு வரும்

**தூங்கி வழியும்**
**இரவுகள் முழுக்க**
**கனவுகள் ரதமேறி**
**கட்டுக்குலையாமல்**
**காப்பாற்றப்பட்டிருக்கிறது**
**நம் காதல்...!**

# பயணம்

மழை முறித்துப் போட்ட
மரங்களின் சோகத்தை
இன்னும் பார்த்தபடி
சாலையின் பயணம் தொடர்கிறது
இரும்புக் குதிரைகளோடு...

# மான்

ஆலமரத்தடியில்
அன்னாந்து பார்த்து
சிரித்திருந்தாய்

இலைகள் உதிர்ந்த
காட்டின் தனிமையை
ரசித்தாய்

வெறிச்சோடிக் கிடக்கும்
விலங்குகளின் கூடுகளில்
விளையாடிப் பார்த்தாய்

பசிக்கு நீரருந்த
சுனை நீரைத்தேடி ஓடுகையில்
சுற்றி வளைத்தன
மான்கள்...

# இதயம்

எப்படியோ
துருப்பிடித்துப் போனது இதயம் ...
ஒன்று மாற்றி ஒன்றாக
பொய்யும் புரட்டும்
அதிகம் படிந்தபடி
விரும்பி
கூறாதது கூறல்
கட்டவிழ்த்து
ஊர் முழுக்க புரளிவிட்டு
தான் மட்டும்
புதியவள்(ன்) என
டமாரம் அடித்துச் சொல்லும்
உனக்குத் தெரியவே இல்லை
நட்புப் பாலம்
உடைகிறதென...!

# விலைவாசி

எண்ணத்தை ஒருங்கிணைத்து
சுழன்றது பம்பரம்.

ஒளியின் சிதறல்களை
கொட்டித் தீர்த்து
தரையில் சுழன்றது
சங்கு சக்கரம்

அலைபாயும் மனத்தை
வானத்துக்கு கொண்டு சென்றது
குழந்தைகள்
குவித்து விளையாடிய
மணல் மேட்டில்
சொருகி வைத்த ராக்கெட்

வானத்துக்கும் பூமிக்கும்
எகிறிக்குதிக்கும் விலைவாசியை
எந்தப் பட்டாசு கொண்டும்
வெடித்துச் சிதறடிக்க முடியாமலே
வானத்தில் பறக்க
வந்து போய்க்கொண்டிருக்கிறது
ஒவ்வொரு தீபாவளியும்...!

# ப்ரியத்தின் மௌனத்தை

கலகங்களோடு
சேர்ந்திருந்தது நட்பு

பலகாரங்களோடு
மொய்த்திருந்தது குடும்பம்
பட்டாசுகளோடு நிறைந்திருந்தது
பிள்ளைகளின் மகிழ்ச்சி

வலமிடம் என
எங்கும் நிறைந்திருந்தது
இன்பம் ...!

காலந்தோறும்
ப்ரியத்தின் மௌனத்தை
வெடிக்க முடியாமலே
வீழ்ந்து கிடக்கிறது
காதல்...!

# தாராளமயம்

தேவதைகளின் நடமாட்டத்தில்
தோற்றுப் போகுமா
பகைவர்களின் சூதாட்டம்

உலகமய கௌரவர்கள்
நாடுகள் தப்பாமல்
நகர்வலம் வந்து
பெட்டிக்கடை தொடங்கி
வாகன கம்பெனி வரை

வயது வரம்பின்றி
வயல்களை சூறையாடி
தேச வனவாசத்துக்கு
தீர்க்கமாய் தீர்ப்பெழுதுகிறார்கள்.

நாடு செழிக்குமென
நம்பிக்கையோடு
தாரை வார்த்த நிலங்களெல்லாம்
தரிசாய்ப் போன கதை
இம்புட்டும் தெரிந்த பின்னர்
திக்குத் தெரியாத காட்டில்
தண்டவாளங்கள் புதைக்கப்படுகின்றன.

ரயில் பயணங்கள்
மறுத்தபடி
பாண்டவர்களின் போராட்டத்தில்
இன்னும் பற்றி எரியாமல்
பகடி பேசுகிறது...
அந்நிய மோகத்தின் ஆசீர்வாதங்கள்
வாசுதேவ கிருஷ்ணனின் தேரை
இன்னும் எந்த இந்தியக் கம்பெனியும்
அடையாளங்கண்டு
தகர்க்க முடியாமல்
தகிடுதத்தம் போடுகையில்
தாவித்தாவி அசுர வேகமாய் பாய்கிறது
தாரளமயம்...

# வாழ்க்கைப் பயணம்

தூக்கமின்றி தொடர்கிறது
இரவின் பயணம்.

ஏக்கத்தோடு தொடர்கிறது
கற்பனையின் பயணம்.

ஆக்கத்தோடு தொடர்கிறது
சிந்தனையின் பயணம்.

தாக்கத்தோடு தொடர்கிறது
எழுத்தின் பயணம்.

கலக்கத்தோடு தொடர்கிறது
கதையின் பயணம்.

இலக்கத்தோடு தொடர்கிறது
கணிதப் பயணம்.

மயக்கத்தோடு தொடர்கிறது
காதல் பயணம்.

**தயக்கத்தோடு தொடர்கிறது**
**தண்ணீர் வண்டிப் பயணம்.**

**பலத்த மழையின் பயணத்திலும்**
**நமுத்துப் போகாமல் தொடர்கிறது**
**மக்களின் வாழ்க்கைப் பயணம்.**

# தீபாவளி

தீமைகள் அழிந்து
திருப்பங்கள் நிகழட்டும்
ஆமைகள் அழியாமல்
தொடரவேண்டும் சாதனைகள்
நன்மைகள் எப்போதும்
நலமாய் வாழ்ந்திட
ஏற்ற வேண்டும் தீபங்கள்.

பட்டாசு வெளிச்சத்தில்
பாதி இருள் போகட்டும்
மீதி இருள்
தன்னம்பிக்கை வெளிச்சத்தில்
மாயட்டும்...

திறமைகள்
இன்னும்... இன்னும்...
தேடலில் ஜொலிக்கட்டும்.

புத்தாடைகளில்
குழந்தைகளின் குதூகலம்
பூத்துக் குலுங்கட்டும்.

வாய்விட்டுச் சிரிக்கும்
வண்ண வண்ணப் பட்டாசுகள்
பூமிக்கும் வானத்துக்கும்
புதுத்தெம்பூட்டட்டும்.

புன்னகை மருந்தில்
பூபாலம் இசைக்கட்டும்
ஏழ்மைக்கு ஏங்கும்
விருப்பங்கள் பிறக்கட்டும்

மார்க்சிய தீபமே
எல்லார்க்கும் எல்லாம் என்றாகட்டும்.

பொதுவாய் ஏற்றும் தீபம்
இருளுக்குப் பொதுமை என்றாகட்டும்.
பூரிப்பில் பண்பாடுகள்
போற்றப்பட
புதுத்தெம்பூட்டட்டும்.

தீண்டாமை இருள்
எங்கும் தீயும் நாள் எப்போது...?

# தாய் அன்பு

பசித்திருக்கும் போதும்
குழவிக்கல்லை ஆட்டுகிறாள்

வசித்திருக்கும்
வாழ்விடங்களிலிருந்து
எப்போதும் கள்ளமில்லா
அன்பினைச் சொரிகிறது
அவளின் இதயம்

உழைத்து முகமிழந்த நிலையிலும்
பிள்ளையின் முகத்தில் கொடுத்த
முத்தத்தின் சுவையை
உணர முடிகிறது
அவளால் மட்டுமே...!

தாயன்பின் உச்சத்தை
எப்போதும் தொட்டுவிட முடியாமல்
கண்ணீர் விட்டு அழுகிறது
வானம்...!

# சினிமான்னு சொல்ல வைத்த சீமான் (கே. பாலசந்தர்)

திரையுலகின்
புராதனங்களை
தீட்சண்யமாக்கி
தீய்ந்து போகாமல்
திரையைக் குளிர வைத்தவன்

சடங்கு சம்பிரதாயங்களை
முறித்துப் போட்டு
திரைக்கு முத்தமிட்டவன்

ஆச்சாரத்தில்
அவதரித்தாலும்
சமூக ஆச்சாரம்
எது எனச் சொல்லி
திரையில் மூட நம்பிக்கைகளுக்கு
முற்றுப்புள்ளி வைத்தவன்...

எத்தனையோ பேரை
திரையில் உலவவிட்டு
தீர்க்கதரிசிகளாக்கிய
திரைச்சிற்பி...

கல்... கவி பாடவும்
சிற்பமாகவும்
இசைபாடி இனிக்கவும்
உன் சிந்தனையில்
சினிமா எப்போதும்
சுவாசித்திருந்தது...

நாடகம் உன்னை
திரைக்குக் கடத்தியது...

திரையை... நீ
திரைகடலுக்கு அப்பாலும்
கடத்தினாய்...

நீ...
பூகோளத்தையும் –
பூகோளம்
உன்னையும்
சுற்றிச் சுற்றி
அழகு பார்த்தது
சினிமா வரைபடம்

அட்சரேகை
தீர்க்கரேகையெல்லாம்
சினிமாவில்
உன் உச்சம்
பார்த்து ரசித்தது.

உன் இயக்கத்தில்
சினிமா இயங்கியது

**உன்னை இயக்கி ரசித்தது**
**தமிழ்...**
**முள் கிரீடம் தான்**
**உன் பாதை முழுக்க...**
**மலர்க்கிரீடம் சூட்டி மகிழ்ந்தது**
**சினிமா...**

**உன் திரைக்காவியம்**
**தினம் தினம் மணக்கும்**
**சினிமா எப்போதும்**
**உன் இயக்கத்தைச் சொல்லும்...!**

## சூறையாடல்

திக்குத் தெரியாத
காட்டில் சூறையாடப்படுகிறது
விலங்குகளின்
வாழ்க்கை மட்டுமல்ல
தலைமுறையாய்
சேர்த்து வைத்த
பூமிக்கான வேர்களும் தான்...!

## மௌனத்தின் சாட்சி

உயிருடன் இருப்பது
இலைகளாகவும்
உதிர்ந்து கிடப்பது
தழைகளாகவும்
பெயர் சூட்டிக் கொள்ள
வேர்களில்
விரிந்து கிடக்கிறது
மௌனத்தின் சாட்சியாய்
மரத்தின் உயிர்....!

# தனிமை

மனதின் மொழி தெரியாமல்
மௌனத்தை அடைகாத்தேன்
கவனத்தோடு கண்ணிமையில்
தப்பாமல் மொழிபெயர்த்தேன்
களவு சொல்லி சந்திப்பை
உறுதி செய்ய முடியாமல்
காத்திருந்த நேரத்தில்
வெடித்துச் சிதறியது
உலர்ந்து ஓடாய்ப் போன
பருத்தியின் தனிமை...!

## பாலைவனம்

செடிகளற்ற வனத்திலிருந்து
நீரின்றித் தகிக்கிறது கோடை
படிகளற்ற நீரலைகள்
தொடர்ந்து கொண்டே செல்லும்
வாழ்வியல் தடங்களின்றி
மூச்சு பறிபோகும்
முதிர் பருவத்தில்
வேர்வைகள் சிந்தி
உயிரூட்டும்
மரங்களற்ற காடு தான்
பாலைவனம்...!

## மனசு...

காத்திருப்புகள்
கடினமானவை தான்
கண்ணுக்குள்ளிருந்து
காட்சிகள் மறையும் வரை...!

ஊர்த்திருவிழாக்களில்
சுற்றிச் சுற்றி வந்தும்
சொரணை இழந்து போனது
மனசு...!

உள்ளங்கள்
கூடுவிட்டு கூடு பாயும்
ரகசியம் தெரியாமலே
உண்மை உயிரிழக்க வைத்தது

கனிந்த காதலின் நட்பை
யாராலும் சொல்ல முடியவில்லை
வானம் தோலுரித்த
கார்மேகத்தின் நிழல்
கடலில் விழுந்த அந்த
கடைசி மணித்துளி வரை..!

# காற்றடித்த திசை வழியில்

குட்டையான உருவத்திலே
கோடி இதயம் தொட்டவன்   தமிழ்
வேட்கையிலே நெட்டையாகி
வானத்தையும் தொட்டவன்.

கொள்கைவழி ஏதுமின்றி
பாட்டுக் களம் கண்டவன்   தமிழ்
பள்ளியிலே கவிதை வாசம்
வீச வழி சொன்னவன்.

தன் பாட்டை ஏணியாக்கி
தமிழ் சினிமா வளர்த்தவன்   தமிழ்
பண் அமைத்து புதுப்பித்து
இசைப் பாடலையும் தந்தவன்

காதல் ரசம் பிழிந்தெடுத்த
காமத்து மன்னனவன்   தமிழ்
காற்றடித்த திசை வழியில்
கனிரசத்தின் அண்ணனவன்

**ஆறறிவாய் சிற்றின்பம்**
**பேரறிவாய் வாழ்ந்தவன் தமிழ்**
**ஊற்றுவழி தேடியுமே**
**மதுக்கோப்பையோடு வாழ்ந்தவன்.**

**கலைக்கதிராய் அவதரித்து**
**தத்துவங்கள் சொன்னவன் தமிழ்**
**அலையடித்த நெஞ்சங்களை**
**தரணியிலே வென்றவன்.**

(அக்.17, 2015) கண்ணதாசன் நினைவாக)

## கரும்பலகை

உழைப்பின் நிறம்
அறிவை உணர வைத்த நிறம்
எப்போதும் குழந்தைகளுக்கும்
பள்ளிக்கூடங்களுக்கும்
பிடித்ததாய் இருக்கிறது
கரும்பலகை...!

## கனவு

மனம் அறியாமலே
பிடித்து விடுகிறது.

சனம் அறியாமலே
பார்த்து விட முடிகிறது.

தனம் அறியாமலே
கொடுத்துவிட முடிகிறது.

கனவின் சுவாரஸ்யத்தை
சொல்ல முடியாமலே
விழி பிதுங்கி அழுகிறது
கனவு...!

## தூரம்

மனம் தொடும் தூரத்தில் இல்லை காற்று
இனம் தொடும் தூரத்தில் இல்லை சுற்றம்
வனம் தொடும் தூரத்தில் இல்லை வானம்
தனம் தொடும் தூரத்தில் இல்லை தானம்.

## உழைக்கும் வர்க்கம்

உறக்கம் கலைய
உன்னதம் பிறக்கும்
இரக்கம் பிறக்க
சமூகம் விழிக்கும்
உழைப்பு சிறக்க
உண்மை தெரியும்
மார்க்சிய ஒளியில்
மகத்துவம் புரியும்
மானுடம் உயர
மலை போல் எழும்...!

# சகுனிகள்

பட்டுக்கோட்டை கட்டிய பாட்டுகள்
கோட்டையைக் கலக்குதடா அது
கட்டுக் கட்டா சுருட்ட வைத்து
காரக் கிருகம் தள்ளுதடா!

கேடிகள் எல்லாம் கோடிகளாக
அரசியல் வளர்த்ததடா – அது
சனங்களின் சொத்து என்பதை மறந்து
சகுனிகள் வளர்ந்தாரடா!

தேர்ந்த ஏழைக்கு தெருக்கோடி தெரியும்
பணக்கோடி தெரியாதடா அது
ஜனங்கூடி அழிக்கும் என்பதை அறியாமல்
மனங்கூடா நட்பிலே மகிழ்ந்தாரடா!

பசியும் பட்டினியும் நாட்டில் இருக்கையில்
பெருங்கோடி வளர்த்தாரடா அது
ஏற்றத்தாழ்வை வளர்த்து விட்டே
ஏழைகள் பெருங்கோடிகள் ஆனாரடா!

சமத்துவம் வளர சாதிகள் தடையாய்
சமூக நீதியும் இடிக்குதடா –அது

மகத்துவமென மார்தட்டும் கூட்டத்தில்
மதங்களும் வாழுதடா...!

அநீதியும் ஊழலும் அளவின்றி வாழ்ந்திட
பதினா றுலகமும் பாழானதடா –அது
மனுநீதி காலங்கள் மறைந்தாலும்
மனித நேயத்தில் வாழ்ந்தாரடா!

உழைப்பவன் அருமையை உணர்த்திட்ட
உண்மைப் பாவலன் நீதானடா உனை
அழைத்ததும் வந்தே வியர்வை சிந்தும்
ஏரோட்டியின் காவலனடா!

## அரசியல்

ஜனநாயகத்தில்
ராஜாக்கள்
சிறை செல்வதும்
கைதிகள் நாடாள்வதும்
சரித்திர உண்மை

திக்குவாய்க்கு
உளறுவாய் மேலென்று
உரக்கச் சொல்கிறது

அரசியல்.

## கணினி மயம்?

கரும்பலகை
கனவாய்ப் போனது
பள்ளிக்கூடமெங்கும்
கணினி மயம்...!

# பள்ளிக்கூடம்

நேர்பட பேசு
நிதானமாய் யோசி
மனதைத் தூர் வாரு
நிழல்படமாய்
நினைவுகளைத் தேக்கு
ஒளியூட்டு
உனக்குள்ளே
ரசித்துப் பாரு

படித்ததை தூவி விடு
விதைத்தும் வை
ஞான குருமார்களை
நினைவில் வை
உண்மை விளங்கும்
உருப்பட எண்ணங்கள்
தேங்கி வழியும்
நல்லதைக் கைக்கொள்
நானிலம் சிறக்க நீயும்
அதைச் சொல்...!

உலகின் விசாலத்தை
உணர்ந்து

**உரியவர்கள்**
**உன்னோடு சேர**
**உரை நிகழ்த்து...!**

**உச்சம் தொட**
**ஆழியில் மூழ்கு**
**முத்தெடு...!**
**முடிவாய் நீயே**
**பேசப்படுவாய்**
**எந்தத் திசையில்**
**உனது தியானம்**
**என்பதை நீயே தீர்மானி...!**

**ஊருக்கு வழிகாட்டும்**
**உலகின் திசை காட்டும்**
**மக்களைப் படிக்க**
**மனந்திறந்து பேசு**
**தெளிவாய் சொல்லு**
**தேர்வில் நீயும் வெல்லு**
**இதுவும்...**
**பள்ளிக்கூடம் தான்...!**

(கவிதை உறவு 42–வது ஆண்டுமலர் 2014)

# வீடுகள்

எல்லாவற்றையும்
உயிர்ப்பித்து
ஆனந்தமாக்கும்
சூரிய சூட்டின் சிரிப்பில்
வசியமாகி
குதூகலமாயிருக்கிறது
குழந்தைகளைச் சுமக்கும்
வீடுகள்.

(அருவி இதழ். 10)

## கனவற்ற வாழ்க்கை

தீபத்தின்
ஒளி காண
நெருப்பை
மீட்ட முடிகிறது

தீயாய் வாழ்கிறது
கோபம்
உணர்ச்சியின்
வாசலெங்கும்
மிருகங்களின்
பயணம்.

தென்றல்
தீண்ட மறுத்து
தேர் இழுக்க முடியாமல்
திக்குத் தெரியாத காட்டில்
எப்போதும்
சூறையாடப்படுகிறது
கனவற்றவர்களின்
வாழ்க்கை...!

(அருவி இதழ். 11)

# கண்ணீர் கதை

மௌனத்தின்
சாட்சிகளைத் தேடி
அலைபாய்ந்து கொண்டிருக்கும்
மனத்தினூடே
சமரசமின்றிப்
போராடிக் கொண்டிருக்கிறது
வெளிச்சத்தின் உண்மைகள்.

நிழல் தேடித் திரியும்
சலனங்கள்...
புன்னகைத்த
உதடுகளுக்குள்
பொசுங்கியும்
புழுங்கியும் கிடக்கிறது
வேர்களை வளர்த்த
மரங்களின்
கண்ணீர் கதைகள்...!

(முல்லைச்சரம் – ஏப்.13)

## வானம்

விடுதலையான
வார்த்தைகளுக்குள்
சுதந்திரத்தின்
அடக்குமுறைகள்
கனன்று கொண்டிருப்பதை
உணர முடியாமல்
வெள்ளந்தியாய் இருக்கிறது
சூரியனைப் பிரசவித்த
வானம்...!

(முல்லைச்சரம் – ஏப்.13)

## சங்கீதம்

காப்பகத்தில்
கணக்கற்றுக் கிடக்கும்
உயிர்களுக்கு
சுவாசிக்கக் கற்றுத்தருகிறது
விடியலில் கரையும்
பறவையின் சங்கீதம்..!

# காமம்

**ஊமையாய் வந்து**
**உருச்சிதைக்கும்**
**காமத்தை எண்ணி**
**ரத்தம் சொட்ட**
**தேம்பி அழுகிறது வாழ்க்கை...!**

**தொடரும்**
**பாலியல் வன்மங்களில்**
**புகைந்து கொண்டிருக்கிறது**
**விடுதலையின் நெருப்பு...!**

(புதிய ஆசிரியன் – ஜன.15)

# அன்பு

விட்டு விட்டுப்
பெய்கிறது மழை
தொட்டுப் பார்த்ததும்
பூரித்து மகிழ்கிறது
பூக்கள்

கட்டி கட்டியாய்
உருகிக் கொண்டிருக்கும்
பனிக்கட்டியில்
புரிந்து கொள்ள முடிகிறது
அன்புடைமை
அதிகாரத்தின்
ஈரக்கரைசலை...

# வாழ்வின் சூட்சுமம்

கண்ணீர்
தேக்கி வைத்த
தொட்டிக்குள்
நீந்துகின்றன
மீன்கள்

பன்னீர் தோய்த்த
சட்டைகளின்
மணம் வீசிச் சிரிக்கிறது
அழுக்கின் கறைகள்...!

சுத்தமான நீரின்றி
உப்புத் தண்ணீர்
குடித்துக் குடித்து
சுவாசிக்க முடியாமல்
திணறுகிறது
வாழ்வின் சூட்சுமம்.

வளர்ந்து வரும்
பூச்செடிகளின்
வேர்களில்
வீசி ஊற்றப்படுகிறது
வெந்நீர்...

**சூதில் நாடு கொள்ள...**
**விற்பனைக்குக்**
**கூவி அழைத்தவர்களுக்கு**
**தண்டனை தந்தது**
**தண்டி யாத்திரை**

**ஆழிசூழ் உலகத்தின்**
**அக்கறையோடு**
**சுவாசிக்க வைக்கிறது**
**படகின் துடுப்புகள்.**

**வாழ்வுக்குள்ளாகவும்**
**எப்போதும் இருக்கிறது**
**உப்புக்கான அரசியல்.**

(முல்லைச்சரம்)

# ஆகஸ்ட் 15

பிரியமாய்
உடுத்தும் ஆடைக்கான
நெசவு

தேசத்தின்
அடிநாதமும் ஆத்மாவுமான
வேளாண்மை
தாகத்தை தீர்த்து
உயிர்ப்பிச்சை தரும்
தண்ணீர்

நோயின்றி வாழ
நூறு நூறு வைத்தியம் சொல்லும்
சுகாதாரம்.

பாதையில் பயணித்து
பரிமாற்ற வணிகத்துக்குதவும்
போக்குவரத்து
இருளற்ற தேசத்தை
உருவாக்க நினைக்கும்
மின்சாரம்

**வாழ்வுக்கான ஜீவாதாரமாய்**
**நிற்கும் பொதுத்துறையெனும்**
**திருக்கோயில்கள்...**

**எல்லாமும் –**
**தனியார் மயத்தில்**
**ஏலம் விட்ட பின்**
**குளிர்சாதன சவக்கிடங்கில்**
**கேட்பாரற்றுக் கிடக்கிறது சுதந்திரம்.**

# இயற்கை

ஆடை களைந்து
அந்நியமாகிப் போனது
மரங்கள்.

வெறுந்தரையை
சலனப்படுத்தி
பச்சையம் உருவமிழந்து
சலசலக்க வைக்கிறது
சருகுகள்...!

காடை பறந்து
வெப்பத்தை விசிறி விடுகிறது
சிறகுகள்.

மடை திறக்காமலே
அனலின் ஊற்று
பாகை டிகிரிகளைக் கடந்து
பரிகாசம் செய்கிறது
உயிரோடு...

**கோடையின் உக்கிரத்தை**
**சொல்லி முடிப்பதற்குள்**
**தவித்த வாய்க்கு**
**தண்ணீர் தந்து**
**வாழ்வைக் குளிர வைக்கிறது**

**வான்நோக்கி வளர்ந்த**
**மரங்களின்**
**நுங்கும்...இளநீரும்**
**கொடியில் பிறந்த வெள்ளரியும்...**
**கோடைக்குக் குளிரும்**
**குளிருக்கு கோடையும்**
**கொடையாக**
**படைத்தே ரசிக்கிறது**
**இயற்கை...!**

(நன்றி : சிகரம்)

# ரணங்களின் கொதிப்பு

சிறகொடிந்த மயில்
காலுடைந்த காகம்
மூக்குடைந்த குருவி
வாய் கிழிந்த வாத்து
சீரழிந்த வரிக்குதிரையின் வயிறு...!

எல்லா உயிரினங்களிலும்
தெரிகிறது
ரணங்களின் கொதிப்புகள்...!

அழிவின் சாளரத்தில்
அரை மனதோடு
பழகுகின்றன
ஆறறிவின் மானுடம்...!

காடுகளின் மொழிகளில்
காத்திரமாய் பரிமாறிக் கொள்ளும்
ஆதிவாசியின் பேரறிவு
எல்லாவற்றிற்கும்
அமுதசுரபியாய்
ஆசீர்வதிக்கிறது...!

**இரக்கத்தில் சுவாசிக்கும்**
**இதயங்களைத் தேடியே**
**எப்போதும்**
**ஜீவித்திருக்க விரும்புகின்றன**
**பறப்பன...**
**ஊர்வன...**
**நடப்பன யாவும்...!**

# குறும்படம்

திறந்து வைத்த சன்னல்களில்
இரவு ஜெயித்து விட
கூட்டில் புள்ளினங்கள்
அடர்ந்த ராகத்தில் பாட
பயிர்கள் நனைத்த
வயிலின் உயிர்ச்சுவையை
ஞாபகங்களின் வலியோடு
தேடிக்கொண்டிருக்கிறது
நிலத்தின் ஆணிவேர்...!

தார் சுமந்த சாலை
சூட்டின் உக்கிரம் தணிந்து
காற்றின் துக்கத்தில்
ஒடிந்த றெக்கைகள் மீது
வலியின் நிதானங்களில்
போதையூட்டும் ராகங்களை இசைத்து.

பூக்களின் உணர்வில்
நீந்திக் களைப்பாறிய
வண்டுகளின் காம வேள்வியை
என்னவென்று சொல்வது?

**வானத்தில் மேகங்கள்**
**பஞ்சுப் பொதிக் கூட்டங்களோடு**
**நிலவை விரட்டும் விரசத்தின்**
**நனவுகளைப் பார்த்து**
**நொறுங்கிப் போகின்றன**
**தூக்கத்தில் வந்த திரைக்கதையற்ற**
**குறும்படமொன்று...!**

# சின்னத்திரை

சின்னத் திரையில்
சொல்லித் தரப்படுகின்றன
சிணுங்கலும் அழுகையும்...!

மாமியார்... மருமகள்
புனிதம் கெட்டு –
அப்பா அம்மா
அநாதையாய்த் திரிவதும்
அக்கா தங்கை
அழுக்காகி அலைவதும்
அண்ணன் தம்பி
அசிங்கமாய்த் திரிவதும்
கொழுந்தன்... கொழுந்தி
கொழுப்பேறி அலைவதுமென
வீடு(கள்) முழுக்க
விழுங்கிக் கொள்ள முடிகிறது
சின்னத்திரையால்...

சோகமோ ... துக்கமோ....
இன்பமோ இனிமையோ
ஆறாக ஓடி...
உப்புக்கண்ணீர் முழுக்க கடலாகி
அலைபாய்கிறது வாழ்க்கை...!

**குடும்ப உறவுகளைக் குதறி எடுத்து**
**பசி தீர்த்துக்கொண்டே**
**நம் கையிலிருந்து அறுபட்ட குடும்பத்தை**
**எப்போதும்**

**நினைவுபடுத்தி வைக்கிறது**
**சின்னத்திரை...!**

**வீடுகள்... குடும்பம்**
**எனும்**
**பெரிய திரையைக் கிழித்து...!**

(கவிதை உறவு, ஜன–2011)

# சலனம்

தேசத்தின்
ஆணி வேர்களில் இருக்கிறது
தியாகத்தின் தொடர்கதைகள்...!

அடியுரமாய்
பாய்ச்சிய குருதியும்
மனிதகுல சதைகளும்
ஆறுகளை
நினைவுபடுத்தி
சலனப்படுத்துகிறது...!

பருத்து வளர்ந்த
மரத்தின் கிளைகளைத் தாங்கும்
அடிமரத்தின் தரவுகளை
அச்சாணியில்
சுமந்து கொண்டிருக்கிறது காலம்...

சொல்லிமாளாது தான்...
சோகங்களைத் தாங்கி
பூத்த பூக்களின்
நிற அழகும்
காற்றோடு கலந்த வாசனையும்

**காய்ந்த காய்களின் மனங்களும்**
**பழுமாகி ருசித்த நாக்குகளும்**
**பேசிக் கொண்டிருக்கின்றன**
**இந்நிலப் போரின்**
**பிரளயத்தில்**
**காப்பாற்றப்பட்ட**
**தேசத்தின் வரலாற்றுக்**
**கதைகளை...!**

# ரௌத்திரம்...

ஒவ்வாமையோடு
ஒத்துப் போக முடியாமல்
வலி சுமந்து
போராட வேண்டியிருக்கிறது

வாழ்க்கை
தீர்க்கமாய் தீமைகளை
மூட்டையாய்க் கட்டி
தலையில் ஏற்றிப் பார்த்து
ரசிக்கத் துடிக்கிறது
கௌரவர் கூட்டம்..

துகிலுரிக்கப்படும் பாஞ்சாலிகளின்
துயரக்கதை இன்னும் தொடர்கிறது
உலகமய உற்சவத்தில்...

தாரவாந்துப் போன நிலமும் நீரும்
காற்று வழியே கரைந்து போக
ஆகாயத்தின் அத்தனை அழகையும்
அழிக்கத் துடிக்கிறது
யாக நெருப்பு...
சாமிகள் கடத்தி

சாவுகளை விலைக்கு வாங்கும்
சமாதிகளின் ரத்தவாடையிலிருந்து
ஒலிக்கும் ஓங்கார நாதம்
பாடிக்கொண்டிருக்கிறது
ஏழை பாழைகளின் ஏகாந்தத்தை

மௌனமாய் மலரும்
பூவின் மலர்ச்சியிலும்
புரட்சி வெடிக்கும்
வனவாசம் நீங்கிய
இந்திரப் பிரஸ்தத்துக்கு...

சகல தோழமைகளும்
சுவாசிக்கும் கூடுகள்
கோடி கோடியாய் வசிக்கும்
நட்சத்திரக் கூட்டத்தை
எண்ண முடியாமல்
முடியும் தடியும்
முனகி... முனகி
தினம் தினம் ஏங்கும் நாளுக்கு
எதிராய் பழகுவோம்
ரௌத்திரம்...!

(வண்ணக்கதிர், டிச.–2014)

# ரசனை

காலம்
கண்ணிமையைத்
தொட்டுப் பார்த்தது.

ஞாலம்
உயிரோட்டத்தை
விரும்பி ரசித்தது.

பாலம்
பயணத்தை
சுமந்து சிரித்தது.

தாளம்
இசையின்
சுதி கூட்டி மகிழ்ந்தது.

கோலம்
வாழ்வை வீதியில்
விசிறி விட்டது.

மேளம்
இசைந்து கன்னல்
இடி இடித்தது.

**எல்லாவற்றையும் கேட்டு**
**ரசித்துக் கொண்டிருந்த கவிதை**
**சந்தமில்லையென**
**மௌனித்து வெளியேறி**
**நகைத்தது.**

**மரபு மைந்தனை**
**மானசீகமாய்ப்**
**பார்த்தபடி...!**

# தியாகம்

துவை கல்லில் பிறக்கிறது
அழுக்கை அகற்றும்
இசை

கலாசாலை கற்றுத் தருகிறது
அறியாமை அகற்றும்
அறிவு.

நரம்பு மண்டலம்
முறுக்கேறி சிரிக்கிறது
வீரம்.

பஞ்சை பராரிக்கு
படிக்கட்டுத் தந்தது
செல்வம்.

மனம் பக்குவப்பட
ஆறுதல் தந்தது
காதல்.

ஆழ் மனத்தின் பிம்பத்தை
திரையில் காட்டியது
கனவு.

வெறுப்பற்று விலையேதும்
கேட்காமலே பெய்கிறது
மழை.

யாரும் கேட்காமலே
கொடுத்தும் ரசித்தும்
எட்ட நின்று பார்க்கிறது
தியாகம்..!

# பனி

மேகம் துருத்தி
மெல்ல தலைகாட்டும்
சூரியனிடம்
அடங்கித் தான் போகிறது
புவியில்
மரங்களெங்கும்
வெள்ளிப் படலம்
இற்று விழும்
ஒவ்வொரு
அதிகாலைப் பொழுதின்
பனியும்...!

## உயிருக்கான சுவாசம்

உலர்ந்த மரக்கிளையில்
உயிர்த்துடிப்புடன் இருந்தது
ஒற்றை இலை.

கரிய மேகத்தில்
மறுபதிப்புடன் உலா வருகிறது
சிவந்த நிலா.

வண்ணப் படத்தில்
பறக்க முடியாமல் தவிக்கிறது
பட்டாம்பூச்சி.

மலர் முகத்தில்
தேனுறிஞ்சி முத்தச்சுவை கண்டது
வண்டு.

வறட்சியில் தவிப்பும்
நீர் சுழற்சியில் துடிப்பும்
தடைபோடத் துடித்தும்
சுற்றிச் சுற்றி வருகிறது
உயிருக்கான சுவாசம்...!

# உழவன்

வயலை நெய்த உழவனுக்கு
நெல் மணிகள் மணக்குது
குயவன் செய்த பானையிலே
பாலும் பொங்கி வழியுது.

வேர்வை சிந்தும் உழவனையே
புவியும் வணங்கி மகிழுது
ஏர் பூட்டி உழுத உழைப்பும்
கரும்பாய் இனித்து சுவைக்குது

சாலையிலே மாட்டுவண்டி
றெக்கை கட்டிப் பறக்குது
மாலை போட்டு மனிதகுலம
மகிழ்ச்சியிலே திளைக்குது.

(தீக்கதிர்)

# தரிசு நிலம்

தடைபடாத மின்சாரம்
தரணியெங்கும் கிடைக்கணும்
மடைதிறந்த வெள்ளமென
வெளிச்சப்பாதை திறக்கணும்

தமிழ்க் காதல் அழிக்க எண்ணும்
போகிக் கூட்டம் ஒழியனும்
அமிழ்தக் காதல் சாதி மறுப்பு
திருமணங்கள் நடக்கணும்.

புத்தகப் பாதையிலே
அறிவுலகம் நடக்கணும்
வித்தகக் கலையினிலே
புவி முழுதும் சிறக்கணும்.

உலகமயப் பாதையெலாம்
மண்மூடிப் போகணும்
திலகமிட்டு சொந்த நாட்டில்
தொழில் வளம் பெருகணும்.

உழைக்கும் வர்க்கப் போராட்டம்
உன்னதமாய் நடக்கணும்
தழைத்தோங்கும் தரிசு நிலம்
உழவன் கைக்குக் கிடைக்கணும்..

# சுதந்திரம்

உணவுக் களத்தின்
உடலெங்கும் விதைக்கப்படுகிறது
நச்சுரங்களின் நயவஞ்சகம்.

கனவுக் களமெங்கும்
திறக்க மறுக்கிறது
வேலைக்குத் திரியும்
படித்த இளைஞர்களுக்கான
தொழிற்சாலையின் கதவுகள்.

தினவெடுத்து அலையும்
கார்ப்பரேட் நிறுவனங்களின்
தினசரி அஜண்டாவாக
நாடாளும் மன்றங்களின்
கூறையாடலே
சுற்றிச் சுற்றி வருகிறது.

நனவுக் களத்தின் பரப்பெங்கும்
விதைக்கப்படுகிறது
மதங்களின் மாஃபியா விதைகள்.

**மனங்களை வெல்ல முடியாமல்**
**மாதர்களின் உரிமைகளை**
**வென்றுவிடுகிறது**
**ஆணாதிக்கத்தின் அதிகபட்ச**
**ஜனநாயகம்.**

**ரண களத்தில்**
**அழுகிப் போய்**
**நாற்றமடிக்கிறது**
**போராடிப் பெற்ற**
**சுதந்திரம்...!**

★★★★★★★★★★★★

**உங்களுக்காக. . .**

**உங்களுக்காக. . .**

கவிஞர் ஆரிசன் ஐக்கூவிலிருந்து சில ஆண்டுகளுக்குப் பின் புதிய கவிதை வெளிக்கு இத்தொகுப்பின் மூலம் வருகிறார். முதல் முழக்கமே கம்பீரமாய் உள்ளது. பூமியைவிட்டு வானத்தைத் தொட பறந்து சென்றாலும் துரத்திக் கொண்டே வருகிறது கவிதை என்று அமர்க்களமாய்த் தொடங்குகிறார்.

**எஸ்.ஏ. பெருமாள்**
ஆசிரியர், செம்மலர்.

கவிஞர் ஆரிசன் ஐக்கூ வழியாகத் தன் பார்வையை வண்ணத்துப்பூச்சியின் வண்ணமென வரைந்து தொடர்ந்து கவிதைகள் வழி இயங்கிக் கொண்டிருக்கும் நவீனக் கவிஞர்களில் ஒருவர். சமூகத்தின் இயங்குதலை இயற்கையின் இயங்குதலைப் புரிந்து கொண்டவர் என்பதால் இவர் கையாளும் சொற்களில் உண்மையின் உண்மை வந்து உட்கார்ந்து கொள்கிறது. பூ மலர்வதைப் போல....

**இரா.தெ.முத்து**
துணைப்பொதுச் செயலாளர், தமுஎகச

இலக்கியமும் கலையும் இருத்தலியல் அனுபவங்கள். இரண்டும் ஆரிசன் அவர்கள் நடைபயிலும் வாழ்க்கைப் பாதை.

**காவனூர் ந. சீனிவாசன்**
ஆசிரியர், அருவி கவிதைக் காலாண்டிதழ்.

மின் இலக்கியப் பூங்கா என்ற கிரீடத்தில் மேலும் ஒரு கல் பதித்துள்ளார் கவிஞர் ஆரிசன். மேலும் மேலும் இவரது கவிதைகள் வரட்டும், சமுதாயச் சாக்கடைகளைச் சாடட்டும், விழிப்புணர்வு மலரட்டும்.

**சிவ. சிவக்குமார்**
மாநிலத் துணைத் தலைவர்,
மின் இலக்கியப் பூங்கா.

குழந்தை மனமும் குவலயம் மாற்றும் சிந்தனையும் கொண்டவர் கவிஞர் ஆரிசன். கலை இலக்கியத் தளத்தில் காலந்தோறும் செயல்படும் படைப்பாளி. அவர்தம் கவிதை நூலை வெளியிடுவதில் என்றும் பெருமிதமும், பெரு மகிழ்வும் தொடரும்...

**பூங்குயில் சிவகுமார்**

**ஆசா பதிப்பகம்**
கீழ்க்கொடுங்காலூர்
வந்தவாசி - 604 403
கைப்பேசி : 94423 11118

